Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி
3

வருடாந்திர
சந்தா
ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly
BADAR Qadian
TAMIL

இதழ்
3-4

ஆசிரியர்
முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர்
ரஃபீக் அஹ்மது

1-8 ஜமாத்துல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி　　18-25 ஸுல்ஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
18-25 ஜனவரி 2018

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**என்னை எதிர்க்கின்ற ஆலிம்களும் அவர்களைப் போன்றோரும் குறைகளைத் தேடுவதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. என்னை அழிப்பதற்காக எந்த சூழ்ச்சியையும் அவர்கள் செய்யாமல் இருக்கவில்லை. ஆனால் இறுதியில் இறைவன் என்னை வெற்றி பெறச் செய்தான். பொய்யை தனது கால்களின் கீழ் நசுக்கி விடாத வரை இறைவன் தனது பணியை நிறுத்தி விடுவதில்லை.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**108 -வது அடையாளம்** பராஹீனே அஹ்மதிய்யாவில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது: اَرَدْتُّ اَنْ اَسْتَخْلِفَ فَخَلَقْتُ اٰدَمَ அதாவது, நான் கலீஃபாவை உருவாக்க நாடினேன். எனவே, நான் ஆதமை கலீஃபாவாக ஆக்கினேன் என்ற இந்த இல்ஹாம் 25 வருடங்களாக பராஹீனே அஹ்மதிய்யாவில் இடம்பெற்றுள்ளது. இந்த இடத்தில் பராஹீனே அஹ்மதிய்யாவில் இறைவன் எனக்கு ஆதம் என்று பெயர் வைத்துள்ளான். மேலும், இது ஒரு முன்னறிவிப்பு ஆகும். அது இந்த விஷயத்தை சைகையாக சுட்டிக் காட்டுகின்றது. மலக்குகள் ஆதமின் குறைகளைத் தேடினர். ஆதமை மறுத்தனர். ஆனால், இறுதியில் இறைவன் அதே ஆதமைத்தான் கலீஃபாவாக ஆக்கினான். எல்லாருக்கும் ஆதமிற்கு முன்னால் தலை குனிய வேண்டியது வந்தது. இங்கும் அவ்வாறே நடக்கும் என்று இறைவன் கூறுகின்றான். என்னை எதிர்க்கின்ற ஆலிம்களும் அவர்களைப் போன்றோரும் குறைகளைத் தேடுவதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. என்னை அழிப்பதற்காக எந்த சூழ்ச்சியையும் அவர்கள் செய்யாமல் இருக்கவில்லை. ஆனால், இறுதியில் இறைவன் என்னை வெற்றி பெறச் செய்தான். பொய்யை தனது கால்களின் கீழ் நசுக்கி விடாத வரை இறைவன் தனது பணியை நிறுத்துவதில்லை.

**109 -வது அடையாளம்** பராஹீனே அஹ்மதிய்யாவில் இவ்வாறு எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது:

وَكَذَالِكَ مَنَنَّا عَلٰى يُوْسُفَ لِنَصْرِفَ عَنْهُ السُّوْءَ وَالْفَحْشَآءَ۔ وَلِتُنْذِرَ قَوْمًا مَّا اُنْذِرَ اٰبَآءُ هُمْ فَهُمْ غَافِلُوْنَ

(பராஹீனே அஹ்மதிய்யாவின் 555 -வது பக்கத்தைப் பார்க்கவும்) இவ்வாறே நாம் நமது அடையாளங்கள் மூலமாக அந்த யூஸுஃபின் மீது அருள் புரிந்தோம். அதன் மூலம் எந்தத் தீமையும் குறையும் அவருடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றதோ அவற்றிலிருந்து நாம் அவரை காப்பாற்றினோம். இந்த அடையாளங்களின் மகத்துவத்தின் காரணமாக கவனமற்றவர்களாக இருப்பவர்களை எச்சரிக்கை செய்வதற்கு தகுதியுடையவனாக நீ ஆகி விடுகின்றாய். ஏனென்றால், எவர்களுக்கு இறைவன் தன் தரப்பிலிருந்து மகத்துவத்தையும் தனிச்சிறப்பையும் வழங்குகின்றானோ உண்மையில் அத்தகைய மக்களின் அறிவுரைதான் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இடத்தில் இறைவன் எனக்கு யூஸுஃப் என்று பெயர் வைத்துள்ளான். மேலும், இது ஒரு முன்னறிவிப்பாகும். இதன் பொருள் என்னவென்றால், எவ்வாறு யூஸுஃபின் சகோதரர்கள் தமது அறியாமையின் காரணமாக யூஸுஃபிற்கு அதிகமாக துன்பங்களைத் தந்தார்களோ அவரை அழிப்பதற்கு அவர்கள் செய்த முயற்சிகளில் எந்தக் குறையும் வைக்க -வில்லையோ இங்கும்கூட அவ்வாறே நடக்கும் என்று இறைவன் கூறுகின்றான். சமுதாய சகோதரத்துவத்தைப் பேணுகின்ற இந்த மக்களும்கூட உம்மை அழிப்பதற்காக பெரும் பெரும் தந்திரங்களைக் கையாள்வர் என்பதை இறைவன் சுட்டிக் காட்டுகின்றான். ஆனால், இறுதியில் அவர்கள் தோல்வி அடைவர். எந்த நபரை நீங்கள் இழிவுபடுத்த விரும்பினீர்களோ நான் அவருக்கு கண்ணியத்தின் கிரீடத்தை அணிவித்தேன் என்பதை இறைவன் அவர்களுக்கு தெளிவாகக் காட்டி விடுவான். அப்போது நாம் தவறில் இருந்திருக்கின்றோம் என்பது பலருக்கும் தெளிவாக தெரிந்து விடும்.

இது தொடர்பாக இன்னோர் இல்ஹாமில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

يَخِرُّوْنَ عَلَى الْاَذْقَانِ سُجَّدًا۔ رَبَّنَا اغْفِرْلَنَا اِنَّا كُنَّا خَاطِئِيْنَ۔ تَاللّٰهِ لَقَدْ اٰثَرَكَ اللّٰهُ عَلَيْنَا وَاِنْ كُنَّا لَخَاطِئِيْنَ۔ لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ۔ يَغْفِرُ اللّٰهُ لَكُمْ۔ وَهُوَ اَرْحَمُ الرَّاحِمِيْنَ

அதாவது, அம்மக்கள் முகங்குப்புற வீழ்ந்து எங்கள் இறைவா ! எங்களை மன்னிப்பாயாக ! நாங்கள் தவறிழைத்தவர்களாவோம் என்று கூறியவாறு ஸஜ்தா செய்வார்கள். மேலும், உம்மை நோக்கி, இறைவன் மீது ஆணையாக ! இறைவன் எங்கள் எல்லாரிலிருந்தும் உம்மையே தேர்ந்தெடுத்துள்ளான். மேலும், நாங்கள் தவறிழைத்தவர்களாவோம் என்று அவர்கள் கூறுவர். அப்போது இறைவன் தன் பக்கம் திரும்புபவர்களைப் பார்த்து, இன்று உங்கள் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை. ஏனென்றால், நீங்கள் நம்பிக்கை கொண்டீர்கள். இறைவன் உங்களுக்கு முதலில் ஏற்பட்ட தடுமாற்றங்களுக்காக உங்களை மன்னித்து விடுவான். அவன் கருணை காட்டுபவரெல்லாரையும் விட மிக அதிகமாக கருணை காட்டுபவனாவான் என்று கூறுவான்.

சுருக்கமாக, இந்த முன்னறிவிப்பில் இரண்டு மறைவான செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன.

(1) வருங்காலத்தில் சமுதாயத்தின் கடுமையான எதிர்ப்பு உருவாகி விடும். பொறாமையின் தீப்பிழம்பு அவர்களிடம் கொழுந்து விட்டு எரியும். யூஸுஃப் நபியின் சகோதரர்களிடம் அந்த நெருப்பு கொழுந்து விட்டு எரிந்ததுபோன்று அவர்களிடம் அது காணப்படும். அப்போது அவர்கள் உம்மை அழிப்பதற்காக பலவகையான சூழ்ச்சிகளில் ஈடுபடுவர். சமுதாயத்தில்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ரபிய்யுல் அவ்வலின் 12 வது நாள் எப்படிப்பட்ட நாள் என்றால் அல்லாஹ் சிராஜே முனீர் (ஒளி தரும் சூரியன்) என்று கூறிய அந்த நூர் (ஒளி) உலகிற்கு வந்தது. அந்த சூரியன் முழு உலகத்திற்கும் ஆன்மீக வெளிச்சத்தை தர வேண்டியதிருந்தது; வெளிச்சத்தை தந்தது. அந்த சூரியன் இறைவனது அரசாட்சியை உலகத்தில் நிலைநாட்ட வேண்டியதிருந்தது; நிலைநாட்டியது. அந்த சூரியன் நூற்றாண்டுகளாக மரணித்துக்கிடந்தவர்களுக்கு ஆன்மீக வாழ்வைத் தர வேண்டியதிருந்தது; ஆன்மீக வாழ்வைத் தந்தது. அந்த சூரியன் உலகத்திற்கு அமைதியையும் சாந்தியையும் வழங்க வேண்டியதிருந்தது; வழங்கியது. அவர்களைப் பற்றி அல்லாஹ் وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ அதாவது, நாம் உம்மை உலகிற்கு ஒரு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம் என்று கூறினான். மனிதர்களுக்காக மட்டுமல்ல. மாறாக, விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மற்றும் அனைவருக்கும் பெருமானார் (ஸல்) அருட்கொடை ஆவார்கள். மேலும் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல. மாறாக, முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் கருணையாக அவர்கள் இருந்தார்கள். மேலும் அவர் கருணை காட்டக் கூடியவராக விளங்குகின்றார்கள். மேலும் அவருடைய போதனை கியாமத் நாள் வரை ஒவ்வொருவருக்கும் கருணையாகவே இருக்கின்றது. அவர்களைப் பற்றி அல்லாஹ் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களிடம் அல்லாஹ்வின் இந்த தூதர் உங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாவார் என்று கூறினான்.

---

நமது நபி (ஸல்) அவர்கள் நமக்காக ஏகத்துவத்தை நிலைநாட்டியதற்கான முன்மாதிரியையும் நிலைநாட்டியுள்ளார்கள். இறை வணக்கத்தின் முன்மாதிரியையும் நிலைநாட்டியுள்ளார்கள். சிறந்த நல்லொழுக்கத்திற்கான முன்மாதிரியையும் நிலைநாட்டியுள்ளார்கள். அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். ஆனால் வருத்தம் என்னவென்றால், இன்றைய முஸ்லிம்களால் பெரும்பான்மையினர் அன்னாரின் மீது பேரன்பு கொண்டிருப்பதாக வாதம் செய்கின்றனர். ஆனால் அவர்களது செயல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு வழங்கிய மற்றும் நடைமுறைப்படுத்திக் காட்டிய போதனைகளுக்கு முற்றிலும் நேர்மாற்றமானதாக இருக்கின்றது. அன்னார் அகிலங்களுக்கே ஓர் அருட்கொடையாக வந்தார்கள். ஆனால் அன்னார் மீது அன்பு கொண்டிருப்பதாக வாதம் செய்யக்கூடிய, இன்று ரபியுல் அவ்வலின் 12 -வது நாளை மிகவும் எழுச்சியுடன் கொண்டாடக்கூடிய இம்மக்கள், இன்றைய நாளில், அல்லாஹ்வின் தூதரே (ஸல்) அவர்களே! நாங்கள் உங்களது சிறந்த முன்மாதிரிகளின் படி நடந்தவாறு கருணையை எல்லா இடங்களிலும் பரவச் செய்வோம் என்ற உடன்படிக்கையை செய்வதற்குப் பகரமாக பெரும்பான்மையான முஸ்லிம் நாடுகளில் குழப்பமே நிலவுகின்றது.

பாகிஸ்தானிலும் ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் நிலவுகின்ற குழப்பங்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைக் கை விட்டு விட்டு முகந்திருப்பிச் செல்கின்ற மக்களது வேதனைக்குரிய நிலைமை தொடர்பாக ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் மீதிருந்த அன்பு, பெருமானார் (ஸல்) அவர்கள் இறை வணக்கத்தை நிலைநாட்டியது, அன்னார் மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொண்டது, அன்னாரது பணிவு, தாழ்மைக் குணம் போன்ற உயரிய நல்லொழுக்கங்கள் ஆகியவை தொடர்பாக உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஒளிமயமான நல்லுதாரணங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடக்குமாறு ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

முந்தையவர்களோடு இணைகின்ற பின்னவர்களைச் சார்ந்த இந்த ஜமாஅத் மக்கள் மீதும் கடமை என்னவென்றால், இந்த அழகிய முன்மாதிரியை பின்பற்றியவாறு எவ்வாறு சஹாபாக்கள் தங்களது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்தினார்களோ நாமும் நமது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உலகப் பணிகளிலேயே மூழ்கி விடாதீர்கள். கிளை அமைப்புகளும், ஜமாஅத் அமைப்பும் 40 சதவிகிதம், 50 சதவிகிதம், 60 சதவிகிதம் தொழுகையாளியாக ஆகி விட்டார்கள் என்ற அறிக்கையை தருகின்றனர். ஆனால் நாம் எதுவரை 100 சதவிகிதத்தையும் இறை அடியார்களாக உருவாக்கவில்லையோ அதுவரை நாம் நிம்மதியாக இருந்து விடக்கூடாது. மேலும் ஜமாஅத் அமைப்பு மட்டுமல்ல. ஒவ்வொரு தனி நபரும் நான் எந்த நிலையில் இருக்கின்றேன்? என்பதை தன்னைத் தானே ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் படி நடந்தவாறு அஹ்மதிகளுக்கு தங்களது உண்மையின் தரத்தை உயர்த்துவதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இதன் மூலமாக இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்புவதற்கு எளிதான நிலை ஏற்பட வேண்டும். தப்லீக்கிற்கு நமது கூற்றும் நமது செயலும் ஒன்றாக இருப்பது அவசியமாகும். செயலில் உண்மை இல்லை என்றால் மக்கள் மார்க்க போதனைகளையும் பொய்யாகவே கருதுவார்கள். இறைவனது இருப்பு உண்மையாகும். இஸ்லாம் மார்க்கம் உண்மை ஆகும். இந்த உண்மையை பரப்புவதும், உண்மையின் மூலமாக பரப்புவதும் இன்று நமது கடமையாகும்.

நமது நல்லொழுக்க நிலைமை நாம் எப்போதும் சரியாக வைத்திருப்பது அவசியமாகும். இது தான் இன்று ஒரு அஹ்மதியின் முன்மாதிரியாக இருக்க வேண்டும். இன்று முஸ்லிம்களில் இருக்கின்ற குழப்பத்திற்கு இது தான் காரணமாகும். அதாவது அவர்களுடைய நல்லொழுக்க நிலையின் தரம் வீழ்ந்து விட்டது. பெருமானர் (ஸல்) அவர்களது முன்மாதிரியை மக்கள் விட்டு விட்டனர். வெறும் நாவளவில் மட்டுமே வாதம் செய்கின்றனர்.

இன்று உண்மையான மகிழ்ச்சியை கொண்டாட வேண்டுமென்றால் அன்னாரது முன்மாதிரியின் படி நடந்தவாறே மகிழ்ச்சியை கொண்டாட முடியும். அத்துடன் இறை வணக்கத்தின் தரமும் உயர்வானதாக இருக்க வேண்டும். ஏகத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும். உயர்ந்த நல்லொழுக்ககத்தின் தரமும் உயர்வானதாக இருக்க வேண்டும். இது இல்லையென்றால் நமக்கும் மற்றவர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் கிடையாது. நாம் இதன் படி செயல்படவில்லையன்றால் சிதறுண்டு கிடக்கின்ற அம்மக்களுக்கும், தற்காலிக தலைவர்கள் மற்றும் பெயர் தாங்கிய ஆலிம்களுக்குப் பின்னால் சென்றவாறு மக்களுக்கு துன்பத்தை கொடுக்கின்றவர்களுக்கும் நமக்கும் எவ்வித வித்தியாசமும் இருக்காது.

அமெரிக்காவிலுள்ள ஃபிலாடல்ஃபியாவைச் சார்ந்த ஆப்பிரிக்க அமெரிக்க அஹ்மதியான மதிப்பிற்குரிய சிஸ்டர் சல்மா கனீ சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

## சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 1 டிசம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **1 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ** பேருரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

ரபிய்யுல் அவ்வலின் 12 வது நாள் எப்படிப்பட்ட நாள் என்றால் அல்லாஹ் சிராஜே முனீர் (ஒளி தரும் சூரியன்) என்று கூறிய அந்த நூர் (ஒளி) உலகிற்கு வந்தது. அந்த சூரியன் முழு உலகத்திற்கும் ஆன்மீக வெளிச்சத்தை தர வேண்டியதிருந்தது; வெளிச்சத்தை தந்தது. அந்த சூரியன் இறைவனது அரசாட்சியை உலகத்தில் நிலைநாட்ட வேண்டியதிருந்தது; நிலைநாட்டியது. அந்த சூரியன் நூற்றாண்டுகளாக மரணித்துக் கிடந்தவர்களுக்கு ஆன்மீக வாழ்வைத் தர வேண்டியதிருந்தது; ஆன்மீக வாழ்வைத் தந்தது. அந்த சூரியன் உலகத்திற்கு அமைதியையும் சாந்தியையும் வழங்க வேண்டியதிருந்தது; வழங்கியது. அவர்களைப் பற்றி அல்லாஹ் وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ அதாவது, நாம் உம்மை உலகிற்கு ஒரு அருட்கொடையாகவே அனுப்பி-யுள்ளோம் என்று கூறினான். மனிதர்களுக்காக மட்டுமல்ல. மாறாக, விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மற்றும் அனைவருக்கும் பெருமானார் (ஸல்) அருட்கொடை ஆவார்கள். மேலும் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல. மாறாக, முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் கருணையாக அவர்கள் இருந்தார்கள். மேலும் அவர் கருணை காட்டக் கூடியவராக விளங்குகின்றார்கள். மேலும் அவருடைய போதனை கியாமத் நாள் வரை ஒவ்வொருவருக்கும் கருணையாகவே இருக்கின்றது. அவர்களைப் பற்றி அல்லாஹ் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களிடம் அல்லாஹ்வின் இந்த தூதர் உங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதியாவார் என்று கூறினான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ يَرْجُوا اللّٰهَ
وَالْيَوْمَ الْاٰخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا

அதாவது, நிச்சயமாக இத்தூதரிடத்து உங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரி உள்ளது. மேலும் அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ள மற்றும் அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூறக்கூடிய ஒவ்வொருவருக்கும் இவர் ஒரு சிறந்த முன்மாதிரி ஆவார். (33:22)

எனவே இந்த அழகிய முன்மாதிரிகளைப் பின்பற்றி நடக்காமல் முஸ்லிம்கள் தம்மை முஸ்லிம்கள் என்று கூற முடியாது. நமது நபி (ஸல்) அவர்கள் நமக்காக ஏகத்துவத்தை நிலை நாட்டியதற்கான முன்மாதிரியையும் நிலைநாட்டி-யுள்ளார்கள். இறை வணக்கத்தின் முன்மாதிரியையும் நிலைநாட்டியுள்ளார்கள். சிறந்த நல்லொழுக்கத்திற்கான முன்மாதிரியையும் நிலைநாட்டியுள்ளார்கள். அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள்.

ஆனால் வருத்தம் என்னவென்றால், இன்றைய முஸ்லிம்களால் பெரும்பான்மையினர் அன்னாரின் மீது பேரன்பு கொண்டிருப்பதாக வாதம் செய்கின்றனர். ஆனால் அவர்களது செயல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு வழங்கிய மற்றும் நடைமுறைப்படுத்திக் காட்டிய போதனைகளுக்கு முற்றிலும் நேர்மாற்றமானதாக இருக்கின்றது. அன்னார் அகிலங்களுக்கே ஓர் அருட்கொடையாக வந்தார்கள். ஆனால் அன்னார் மீது அன்பு கொண்டிருப்பதாக வாதம் செய்யக் கூடிய, இன்று ரபியுல் அவ்வலின் 12 வது நாளை மிகவும் எழுச்சியுடன் கொண்டாடக்கூடிய இம்மக்கள், இன்றைய நாளில், அல்லாஹ்வின் தூதரே (ஸல்) அவர்களே! நாங்கள் உங்களது சிறந்த முன்மாதிரிகளின்படி நடந்தவாறு கருணையை எல்லா இடங்களிலும் பரவச் செய்வோம் என்ற உடன்படிக்கையை செய்வதற்குப் பகரமாக பெரும்பான்மையான முஸ்லிம் நாடுகளில் குழப்பமே நிலவுகின்றது.

மகிழ்ச்சிகரமான இன்றைய நாளில் முஸ்லிம்களின் செயல்களினால், நாங்கள் எந்த நபியை ஏற்றுக் கொண்டிருக்கின்றோமோ அவர் சாந்தியை சமாதானத்தையும் பரப்புவதில் அரசராக இருக்கின்றார். அவர் உலகிற்கு ஒரு அருட்கொடையாவார். அவர் இறை வணக்கத்தின் உயர் தகுதியை நிலைநாட்டக் கூடியவர் ஆவார். அவர் நல்லொழுக்கத்தில் மிக உயர் தகுதியை அடைந்தவர் ஆவார். மேலும் நாங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அந்த நபியின் நடைமுறைக்கேற்ப செயல்படுபவர்களாவோம். எனவே எங்கள் மூலமாக இந்த நபியின் பிறந்த நாளின் மகிழ்ச்சியினால் அன்பு, நேசம், சாந்தி மற்றும் சமாதானம் என்ற நீரூற்று வெளிப்படும். ஏனென்றால் எங்களுடைய நபி இதைத் தான் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் கூறியுள்ளார்கள். மேலும் இதையே எங்களிடம் அவர்கள் எதிர்பார்த்தார்கள். மேலும் இந்த போதனையையே அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பது வெளிப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இதற்கு நேர்மாற்றமாக நான் கூறியது போன்று முஸ்லிம் நாடுகளில் குழப்பத்திற்கான நிலையே காணப்படுகின்றது. முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் சில இடங்களில் முஸ்லிம்களினால் அவர்கள் அச்சத்தில் இருக்கின்றனர். பாகிஸ்தானில் இந்த அச்சத்தின் காரணமாக குழப்பத்தின் இந்த தீயானது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லாமல் இருப்பதற்காக சில இடங்களில் மொபைல் போனின் தொடர்பு துண்டிக்கப்-பட்டிருக்கின்றது. போலிஸீன் ஒரு பெரும் படை அனைத்து இடங்களிலும் நிற்கின்றது. இது தான் அந்த நபியின் பிறந்த நாளை கொண்டுவதற்கான வழிமுறையா? ஒவ்வொரு நல்ல மனிதரும் அச்சத்தில் இருக்கின்றார். அரசாங்கம் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும், Law and Order -ஐ பேணவும் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நமது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களது பெயரால் அஹ்மதிகளுக்கு எதிராக காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வது மற்றும் கீழ்த்தரமாக பேசுவது அவர்களது அன்றாட பணியே ஆகும். ஆனால் இன்று இன்றைய நாளின் மகிழ்ச்சியினால் இவ்விஷயத்தில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்களது எண்ணத்தின்படி அவர்கள் இந்த செயல்களினால் அந்த உயர்வான மகத்துவத்தை கொண்ட நபியின் கண்ணியத்தையும் மரியாதையையும் மேலோங்கச் செய்வதாக எண்ணுகின்றனர்.

சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தானில் சில இடங்களில் நடந்த முற்றுகை போராட்டம் மற்றும் தர்ணாவானது பாகிஸ்தானிலுள்ள ஒவ்வொரு நல்லியல்புடைய குடிமக்களையும் கஷ்டத்திற்கு உள்ளாக்கியது. வியாபாரம் முடங்கிப் போனது. எந்தவொரு நோயாளியும் மருத்துவமனைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. பள்ளிக் கூடங்கள் அடைக்கப்பட்டன. எந்த அளவுக்கு என்றால் கடைவீதிகளிலுள்ள கடைகள் அடைக்கப்பட்டன. எவரது வீட்டில் உணவு உண்பதற்கான பொருட்கள் இல்லையோ அவர் தமது குழந்தைக்கு உணவிற்கான பொருளை வாங்கி வர இயலாத நிலை ஏற்பட்டது. நாட்டிற்கு கோடிக்கணக்கான ரூபாய் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. இவை அனைத்தும் இந்த பெயர் தாங்கிய ஆலிம்கள் நபியின் மீது அன்பு கொண்டுள்ளோம் என்ற முழக்கத்தின் காரணமாக ஏற்பட்டது. அந்த நபி அகிலங்களுக்கு ஓர் கருணையாக இருக்கின்றார். அந்த நபி நமக்கு வழிப்பாதைகளின் உரிமையை செலுத்துங்கள் என்று போதனை செய்தார்கள். அன்னார் கூறினார்கள். கடை வீதிகளில் கூச்சலிடுவதிலிந்து தவிர்ந்திருங்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் புயூஹ். பாபு கராஹியத் திஸ்ஸஹ்பி ஃபிஸ்ஸீக் ஹதீஸ் 2125)

அன்னார் கூறினார்கள்: வழிப்பாதைகளில் அமர்வதிலிருந்து தவிர்ந்திருங்கள். அதற்கு சஹாபாக்கள் நாங்கள் வழிப்பாதையில் அமரும் நிர்பந்தத்தில் உள்ளோம். ஏனென்றால் அந்த காலத்தில் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு வியாபாரம் செய்வதற்கென எந்தவொரு தனி இடமோ அலுவலகமோ இருக்கவில்லை. எனவே கடை வீதிகளிலும், வழிப்பாதைகளிலும் அமர்ந்து வியாபாரம் செய்ய நேரிட்டது.

அன்னார் இதைக் கேட்டு விட்டு, வழிப்பாதையின் உரிமையை செலுத்துங்கள் என்று கூறினார்கள். அதற்கு வழிப்பாதையின் உரிமை என்ன? என்று கேட்கப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பார்வையை தாழ்த்திக் கொள்ளுங்கள். துக்கம் தருவதில் இருந்து தவிர்ந்திருங்கள். இது வழிப்பாதையின் உரிமையாகும். சலாத்திற்கு பதில் கூறுங்கள். இது வழிப்பாதையின் உரிமையாகும். நல்ல

விஷயங்களைக் கூறுங்கள். தீய விஷயங்களை கூறுவதிலிருந்து தவிர்ந்திருங்கள். இது வழிப் பாதையின் உரிமையாகும் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் மஸாலிமி வல்கஸப் பாபு அ.'.ப்னியத்தித் தவ்ரி வல் ஜுலூஸி .'.பீஹா ஹதீஸ் 2485)

ஆனால், இந்த மக்களோ நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமையை வெளிப்படுத்து –கிறோம் என்ற பெயரில் வழிப்பாதைகளை அடைத்து மக்களுக்கு துன்பத்தை கொடுக்கின் –றார்கள். அவ்வாறிருந்தும் கூட இவர்கள் தமது எண்ணத்தில் மார்க்கத்தின் குத்தகைக்காரர்கள் ஆவர். மேலும் தனது விருப்பத்திற்கேற்ப எவரையும் இவர்கள் காஃபிராகவும் ஆக்கலாம்.. மேலும் அவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப யாரை வேண்டுமானாலும் முஸ்லிமாகவும் ஆக்கலாம். எவ்வாறிருப்பினும் இது இவர்களது செயல்ள் ஆகும். மேலும் இது இவர்களது சொந்த விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான வழியாகும்.

பெருமானார் (ஸல்) அவர்களது போதனை மற்றும் அன்னாரது சிறந்த முன்மாதிரி ஆகியவற்றோடு இதற்கு எவ்வித தொடர்பும் கிடையாது. இவர்கள் எதை விரும்புகின்றார்களோ செய்து கொண்டே இருக்கட்டும். ஆனால் அஹ்மதிகளாகிய நம் பணி என்னவென்றால், நாம் நபி (ஸல்) அவர்களது முன்மாதிரியின் ஒவ்வொரு அம்சத்தையும் பார்க்க வேண்டும். மேலும் அதன்படி அமல் செய்ய முழுமையாக முயற்சியும் செய்ய வேண்டும். தனது அனைத்து விதமான ஆற்றல்களையும் பயன்படுத்தி அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும்.

தற்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அன்னாரது வாழ்க்கையிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் கூறுவேன். அல்லாஹ்வின் மீது அன்னாருக்கு இருந்த பேரன்பு தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது பேரன்பு கொண்டவராகவும், தம்மை மாய்த்துக் கொண்டவராகவும் திகழ்ந்தார்கள். பிறகு உலகத்தில் எவருக்கும் கிடைத்திராத ஒன்றை அவர்கள் பெற்றார்கள். அன்னாருக்கு அல்லாஹ்வின் மீது எந்த அளவுக்கு பேரன்பு இருந்தது என்றால் சாதாரண மக்களும் கூட, عَشِقَ مُحَمَّدٌ عَلٰى رَبِّهٖ அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் தனது ரப்பின் மீது காதல் கொண்டுள்ளார்கள் என்று கூறி வந்தார்கள். (மல்.'.பூஸாத் தொகுதி 6 பக்கம் 273; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவன் மீதிருந்த பேரன்பு தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இணை வைப்பர்கள் அசுத்தமானவர்கள், படைப்பினங்களிலேயே மோசமானவர்கள், அறிவீனர்கள், ஷய்த்தானின் சந்ததிகள், அவர்கள் வணங்கக் கூடியவைகள் நரகத்தின் எரி பொருள்களாகும் போன்ற வசனங்கள் இறங்கிய போது அபூதாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அழைத்து, என்னுடைய மகனே! உனது பழித்துரைத்தலினால் சமுதாயம் மிகுந்த கோபத்தில் உள்ளது. விரைவிலேயே உன்னையும், என்னையும் அது அழித்து விடலாம். நீ அவர்களில் இருக்கின்ற புத்திசாலிகளை அறிவற்றவர் என்று கூறுகின்றாய். அவர்களுடைய பெரியவர்களை படைப்பினங்களிலேயே மோசமானவர்கள் என்று கூறுகின்றாய். மேலும் அவர்கள் மிகவும் மரியாதைக்குரிய கடவுளாக வணங்குகின்ற –வற்றிற்கு நீ நரகம் என்றும், நரகத்தின் எரி பொருள் என்றும் பெயர் வைத்துள்ளாய். மேலும் பொதுவாக அவர்களில் அனைவரையும் அசுத்தமானவர்கள் என்றும், அறிவீனர்கள் என்றும், ஷய்த்தானின் சந்ததிகள் என்றும் கூறுகின்றாய். நான் உனது நன்மைக்காக கூறுகின்றேன். நீ உனது நாவை அடக்கி வைப்பாயாக. மேலும் இவ்வாறு பழித்துரைப்பதிலிருந்து விலகி விடு. இல்லை என்றால் சமுதாயத்தை எதிர்க்கின்ற சக்தி எனக்கு கிடையாது என்று கூறினார்கள். (இவ்வாறு அன்னாரது பெரிய தந்தை கூறினார்கள்.)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். பெருமனார் (ஸல்) அவர்கள் இதற்கு இவ்வாறு பதில் கூறினார்கள். அதாவது பெரிய தந்தையே ! இது பழித்துரைப்பது கிடையாது. மாறாக, இது உண்மையான சம்பவத்தை வெளிப்படுத்துவதும், உள்ளத்தின் நிலையை வெளிப்படுத்தக்கூடிய உண்மை விஷயங்களாகும். மேலும் இதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இதற்காக மரணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தாலும் நான் மிக்க மகிழ்ச்சியோடு இந்த மரணத்தை ஏற்றுக் கொள்கின்றேன். எனது வாழ்வு இந்த வழியிலேயே அர்ப்பணமாகியுள்ளது. மரணத்தின் மீதான அச்சத்தின் காரணமாக உண்மையை வெளிப்படுத்துவதிலிருந்து என்னால் விலகி நிற்க முடியாது. பெரிய தந்தையே! உங்களுக்கு உங்களது பலகீனம் மற்றும் உங்கள் மீது துன்பம் இழைக்கப்படுமோ என்ற அச்சம் இருக்கும் என்றால் நீங்கள் என்னை உங்களது அடைக்கலத்தில் வைப்பதிலிருந்து விலக்கிக் கொள்ளுங்கள். இறைவனைத்தவிர உங்களது எந்த அவசியமும் எனக்கில்லை. இறைவனது கட்டளைகளைக் கொண்டு சேர்ப்பதிலிருந்து ஒருபோதும் என்னை விலக்கி வைக்க முடியாது. எனக்கு எனது இறைவனின் கட்டளைகள் உயிரை விட பிரியமானதாகும். இறைவனுக்காக இந்த வழியில் நான் கொல்லப்பட்டாலும் மீண்டும் மீண்டும் உயிர்பெற்று இவ்வழியில் மரணிக்க வேண்டும் என்றே விரும்புகின்றேன். இது அச்சப்படக்கூடிய இடமல்ல. மாறாக, இதில் தான் எனக்கு அதிகம் அதிகமான ரசனை இருக்கின்றது. அவனது வழியில் துக்கத்தை சகித்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்த போது அன்னாரது முகம் உண்மையாலும், பிரகாசத்தாலும் நிறைந்திருந்தது. அன்னார் தமது சொற்பொழிவை நிறைவு செய்தபோது உண்மையின் ஒளியைக் கண்டு தன்னை அறியாமலேயே அபுதாலிபின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

அபூதாலிப் அவர்கள் கூறினார்கள்: நான் உனது இந்த எல்லா நிலைகளையும் பற்றி அறியாதவனாக இருந்தேன். நீ வேறொரு நிலையில் இருக்கின்றாய். செல். உனது பணியை செய்து கொண்டே இரு. நான் உயிரோடு இருக்கும் வரை எனது சக்திக்கு உட்பட்டு என்னால் இயன்ற வரையில் நான் உனக்கு உதவி செய்வேன். (இஸாலா அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 110-111)

இன்று அஹ்மதிளாகிய நம்மீது நாம் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதனால் காஃபிராவோம் என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது. நான் எடுத்துக் கூறிய இந்த சம்பவத்தை வரலாற்றில் படிக்கின்றோம். அல்லது கேட்கின்றோம். ஆனால் எந்த அளவுக்கு உறுதியாகவும், உளப்பூர்வமாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை கூறினார்களோ அதிலிருந்து அன்னார் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த பேரன்பு வெளிப்படுகின்றது.

இதன் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு காட்டித்தந்த இறைவன் மீதான அன்பும் தெரிய வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்ட பேரன்பு தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம்

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

அருட்களும், சாந்தியும் அவருக்கு இருப்பதாக) தீர்க்கதரிசி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட தீர்க்கதரிசியாவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது.

அவருடைய தூய குணயில்புகளைக் கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. அடையாளம் கண்டு கொள்ள வேண்டிய முறையில் அவரின் உயர் பதவி அறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் அதே உலகிற்குக் கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே. அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. (இந்த இரண்டு விஷயங்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இருந்தது. அதாவது அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் படைப்பினங்களோடு அனுதாபம் காட்டுதலில் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளுதல்).

எனவே அவரின் உள்ளத்தின் ரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் முன்னவர் பின்னவர் அனைவரையும் விட சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அவரே ஒவ்வோர் அருளின் தலையூற்றாக இருக்கின்றார். எந்த நபர் அவரது அருள்களை ஏற்றுக் கொள்ளாமல் ஏதேனும் சிறப்பைப் பெற்றிருப்பதாக வாதம் செய்கின்றாரோ அவர் மனிதர் அல்ல. மாறாக, அவர் ஷய்த்தானின் சந்ததியாக இருக்கின்றார்.

ஏனென்றால், ஒவ்வொரு சிறப்பிற்கான சாவியும் அவருக்கு தரப்பட்டிருக்கின்றது. இறை ஞானத்தின் ஒவ்வொரு கருவூலமும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எவர் அவர் மூலமாக எதையும் பெறவில்லையோ அவர் தொன்மையில் இருந்தே இழப்பிற்குரியவராவார். நாம் எம்மாத்திரம்? நமது உண்மை நிலை என்ன? உண்மையான ஓரிறைமையை நாம் இந்த நபியின் மூலமாக பெற்றோம் என்ற விஷயத்தை நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நாம் இறைவனின் அருளுக்கு நன்றிகேடு காட்டியவர்களாக ஆகி விடுவோம். மேலும் உயிருள்ள இறைவனை நாம் அந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவே அடையாளம் கண்டு கொண்டோம். அவரது ஒளியின் மூலமாகவே அது நமக்கு கிடைத்தது. அந்த இறைவனின் முகத்தைப் பார்ப்பதற்குக் காரணமாக இருக்கின்ற இறைவனுடன் உரையாடுகின்ற அந்த நற்பேறு அந்த மகத்தான நபியின் மூலமாகவே நமக்கு கிடைத்தது. அந்த நேர்வழியின் சூரியனின் ஒளிக்கதிர்கள் வெயிலைப் போன்று நம்மீது படுகின்றது. நாம் அதற்கு எதிரில் நிற்கின்ற அந்த நேரம் வரை நாம் ஒளிமயமானவர்களாக இருக்க முடியும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118-119)

எனவே, அன்னாருக்குப் பின்னால் செல்வதன் மூலமாகத் தான் உண்மையான ஏகத்துவத்தை நம்மால் அறிய முடியும். அன்னாரது முன்மாதிரியின் படி செயல்படுவதன் மூலமாகத் தான் நம்மால் அல்லாஹ் வரை சென்றடைய முடியும். மேலும் இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாதத்தின் அடிப்படையான விஷயமும் ஆகும்.

பெருமானார் (ஸல்) அவர்களது இறை வணக்கத்தின் உயர்வான தரம் என்னவாக இருந்தது? ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அன்னாரது தஹஜ்ஜுத் தொழுகையின் நிலை தொடர்பாக எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையில் 11 ரக்அத்துகளை விட அதிகமாக தொழுதது கிடையாது. ஆனால் அந்த தொழுகை எந்த அளவிற்கு பிரியமானதாகவும், அழகானதாகவும், நீண்டதாகவும் இருந்தது என்றால், அந்த தொழுகை எவ்வளவு நீண்டதாக இருந்தது என்பதைப் பற்றியும், அதன் அழகையும் பற்றி கேட்காதீர்கள். (ஸஹீஹ் புகாரி. கிதாபுத் தஹஜ்ஜுது. பாபு கியாமுன்னபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பில்லைலி ஃபீ ரமலானி வகைரிஹி ஹதீஸ் 1147) அந்த நிலையை சொற்களால் எடுத்துக் கூற இயலாது.

ஒரு அறிவிப்பில் வருகின்றது. அன்னார் தொழுது கொண்டிருந்ததை ஒரு சஹாபி பார்த்தார். (அதாவது அன்னார் தனிமையில் நஃபில் தொழுது கொண்டிருந்ததை). அவர் கூறுகின்றார். அப்போது அதிகமான மன்றாடலின் காரணமாக அன்னாரது நெஞ்சத்திலிருந்து ஆட்டுரலை இயக்குவது போன்ற சப்தம் வந்தது. . (சுனன் அபீதாவூது கிதாபுஸ் ஸலாத்தி பாபுல் புகா ஃபிஸ்ஸலாத்தி ஹதீஸ் 904)

இன்னொரு அறிவிப்பில் பாத்திரத்தில் உலை கொதிப்பதைப் போன்ற சப்தம் போன்று வந்தது என்று வந்துள்ளது. ஓர் அறிவிப்பில் அதிக நேரம் நின்று தொழுததன் காரணமாக அன்னாரது கால்கள் வீங்கியதாகவும் பிறகு அதில் வெடிப்பு ஏற்பட்டதாகவும் வந்துள்ளது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வோ உங்களது முந்தைய பிந்தைய அனைத்து பாவங்களையும் மன்னித்திருக்கும் போது நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டத்தை மேற்கொள்கின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், أَفَلَا أُحِبُّ أَنْ أَكُونَ عَبْدًا شَكُورًا அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடிய அடியாராக ஆக நான் விரும்ப வேண்டாமா? என்று கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி. கிதாபுத் த.ஃப்ஸீருல் குர்ஆன் பாபு லியஃபிரகலல்லாஹு மா தகத்தம மின் ஸன்பிக ஹதீஸ் 4837)

அன்னாரது இறை வணக்கத்தின் இந்த தரம் சஹாபாக்களிடம் எப்படிப்பட்ட புரட்சியை ஏற்படுத்தியது. இதைப் பற்றிக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் மிகவும் வலுவாக கூறுகின்றேன். அவர் எப்படிப்பட்ட எதிரியாக இருந்தாலும் சரி; அவர் ஆரியராக இருந்தாலும், கிறித்தவராக இருந்தாலும் சரி; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வருகைக்கு முன்புள்ள அரபு நாட்டின் நிலைமையை அவர் பார்ப்பாரே –யானால், மேலும் அன்னாரது வருகைக்குப் பின்னால் அன்னாரது போதனைகள் மற்றும் நல்ல தாக்கங்கள் ஏற்பட்ட அந்த நிலைமைகளையும் பார்ப்பாரேயானால், நிச்சயமாக அவருக்கு தன்னை அறியாமலேயே அன்னாரின் உண்மைத் –துவத்திற்கு சான்று பகர வேண்டியது வரும்.

திருக்குர்ஆன் அன்னாரது வருகைக்கு முந்தைய அரபு மக்களின் நிலையைப் பற்றி இவ்வாறு கூறுவதிலிருந்து எளிதாக புரிந்து கொள்ளலாம். يَأْكُلُونَ كَمَا تَأْكُلُ الْأَنْعَامُ அதாவது, அவர்கள் விலங்குகள் உண்பதைப் போன்று உண்டு வந்தனர். (47:13) விலங்குகளைப் போன்ற நிலையில் இருந்தனர். அது அவர்களது குஃப்ரின் நிலையாக இருந்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது தூய்மையான தாக்கம் அவர்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தியபோது அவர்களது நிலைமை يَبِيتُونَ لِرَبِّهِمْ سُجَّدًا وَقِيَامًا அதாவது, அவர்கள் தங்களது இறைவனிடத்தில் சஜ்தா செய்தவாறும் மேலும் நின்றவாறும் இரவைக் கழித்தார்கள் என்பதற்கு ஏற்ப இருந்தது. (25:65)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த மாற்றத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டுவாசிகளான அரபிகளிடம் ஏற்படுத்தினார்களோ, படுகுழியில் இருந்து அவர்களை வெளியேற்றி எந்த உச்சத்திற்கு அவர்களை கொண்டு சென்றார்களோ இந்த அனைத்து விதமான நிலைமைகளையும் பார்க்கும்போது, அன்னார் ஏற்படுத்திய இந்த புரட்சி எத்தகைய மாபெரும் புரட்சியாக உள்ளது?

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS
All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

என்பதை அறிந்து தன்னை அறியாமலேயே மனிதன் அழ ஆரம்பிக்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகத்திலுள்ள எந்தவொரு வரலாற்றிலும் மேலும் எந்தவொரு சமுதாயத்திலும் இதற்கான உதாரணம் கிடைக்காது. இது வெறும் கதை மட்டுமல்ல. மாறாக, இது சம்பவங்களாகும். அதன் உண்மையை ஒரு காலம் ஒப்புக் கொள்ள வேண்டியது வந்தது. (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 144-145; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, முந்தையவர்களோடு இணைகின்ற பின்னவர்களைச் சார்ந்த இந்த ஜமாஅத் மக்கள் மீதும் கடமை என்னவென்றால், இந்த அழகிய முன்மாதிரியை பின்பற்றியவாறு எவ்வாறு சஹாபாக்கள் தங்களது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்தினார்களோ நாமும் நமது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உலகப் பணிகளிலேயே மூழ்கி விடாதீர்கள். கிளை அமைப்புகளும், ஜமாஅத் அமைப்பும் 40 சதவிகிதம், 50 சதவிகிதம், 60 சதவிகிதம் தொழுகையாளியாக ஆகி விட்டார்கள் என்ற அறிக்கையை தருகின்றனர். ஆனால் நாம் எதுவரை 100 சதவிகிதத்தையும் இறை அடியார்களாக உருவாக்கவில்லையோ அதுவரை நாம் நிம்மதியாக இருந்து விடக்கூடாது. மேலும் ஜமாஅத் அமைப்பு மட்டுமல்ல. ஒவ்வொரு தனி நபரும் நான் எந்த நிலையில் இருக்கின்றேன்? என்பதை தன்னைத் தானே ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

பிறகு உண்மையிலும், நேர்மையிலும் அன்னாரது முன்மாதிரி எவ்வாறிருந்தது ? அன்னாரது மிகப்பெரிய எதிரி நஸ்ர் பின் ஹாரிஸ் அவரது சாட்சியை கேளுங்கள். ஒரு முறை குறைஷிகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். அதில் அபு ஜஹிலும், நஸ்ர் பின் ஹாரிஸும் இருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அவர் மாயவித்தைக்காரர் ஆவார் என்று பரப்புமோம். அல்லது அவரை பொய்யர் என்று பரப்புவோம் என்று ஒருவர் கூறிய போது, நஸ்ர் பின் ஹாரிஸ் எழுந்து கூறினார்.

குறைஷிகளே! எப்படிப்பட்ட ஒரு விவகாரம் உங்கள் முன் வந்துள்ளது என்றால் அதற்கு எதிரில் உங்களால் எந்தவொரு திட்டத்தையும் உங்களால் கொண்டு வர முடியவில்லை.

முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களிலேயே ஓர் இளைஞராக இருந்தார்கள். அப்போது அவர் உங்கள் அனைவரது விருப்பத்திற்குரியவராக இருந்தார்கள். அதிகமாக உண்மை பேசக் கூடியவராக இருந்தார்கள். உங்கள் எல்லோரையும் விட அமானிதங்களை பேணக் கூடியவராக இருந்தார்கள். நீங்கள் அவரது தலையில் முதுமையின் அடையாளங்கள் அதாவது வெள்ளை முடியை கண்ட பிறகு நீங்கள் அவரை வித்தைக் காட்டக்கூடியவர் என்று கூறிகிறீர்கள். அவரிடம் வித்தை காட்டக்கூடிய எந்த விஷயமும் இல்லை. நாமும் வித்தைக்காரரைக் கண்டுள்ளோம். நீங்கள் அவரை குறி சொல்லக் கூடியவர் என்று கூறினீர்கள். நாமும் குறி சொல்லக் கூடியவரைக் கண்டுள்ளோம். அவர் ஒருபோதும் குறி சொல்லக் கூடியவர் அல்ல. நீங்கள் அவரை கவிஞர் என்று கூறினீர்கள். நாமும் அனைத்து விதமான கவிதைகளையும் அறிவோம். அவர் ஒருபோதும் கவிஞர் அல்ல. நீங்கள் அவரை பைத்தியக்காரர் என்று கூறினீர்கள். அவரிடம் பைத்தியத்திற்கான எந்த அறிகுறியும் இல்லை. குறைஷிகளே! நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால் உங்களது இந்த விவகாரம் மிகப்பெரியதாகும். (சீரத் இப்னு ஹிஷாம் முதல் பாகம் பக்கம் 192. பாபு உத்பது ரபீயதி ஈபாஸுர் ரஸூல் (ஸல்). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் அரபியில் 2008 -ல் அச்சிடப்பட்டது)

பிறகு அபுஜஹினினால் அன்னார் உண்மையாளர் என்பதை ஒருபோதும் மறுக்க முடியவில்லை. அதாவது அன்னார் உண்மை பேசக்கூடியவர் என்பதை அவர் கூறினார். நான் உம்மை பொய்யர் என்று கூறவில்லை. ஆனால் நீங்கள் கொண்டு வந்துள்ள போதனையையே தவறாக கூறுகின்றேன். ஏனென்றால் எங்களது சிலைளுக்கு எதிராக நீங்கள் கூறுகின்றீர்கள். (சுனன் திர்மிதி அப்வாபு தஃப்ஸீருல் குர்ஆன் பாபு வமின் சூரத்துல் அன்ஆம் ஹதீஸ் 3064)

அபு சுஃப்யானும் ஹெர்குல் மன்னரின் அரிசவையில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் பேசியது கிடையாது. மேலும் எப்போதும் உண்மையையே கூற வேண்டும் என்று போதனை செய்வார்கள் என்றே கூறினார்.

எவ்வளவு கொடிய எதிரியாக இருந்தாலும் அன்னாரை ஒருபோதும் அவர்களால் பொய்யர் என்று கூற முடியவில்லை. இதுவே அன்னாரது நபித்துவம் உண்மையாகும் என்பதற்கான ஆதாரமாகும். யூத ஆலிம் அன்னாரது முகத்தை பார்த்து இது பொய்யருடைய முகமாக இருக்க முடியாது என்று கூறினார். (சுனன் திர்மிதி. அப்வாபு ஸிஃப்பதுல் கியாமத்தி பாபு அஃப்ஸூல் ஸலாம் ஹதீஸ் 2485)

ஆக, இன்றும் அன்னாரது போதனை மற்றும் அன்னாரது செயல்களின் உயர் தரத்தை நிலைநாட்டும் போது தான் முஸ்லிம் அல்லாதவர்களை இஸ்லாத்திற்கு அருகில் கொண்டு வர முடியும். இந்த பொய், ஏமாற்றுதல் போன்றவை இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பை தூண்டுமேயொழிய இஸ்லாத்திற்கு அருகில் கொண்டு வர இயலாது. உலகம் சார்ந்த பேச்சுக்கள், தனது அரசாங்கங்களை காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வது மேலும் பெயர் தாங்கிய ஆலிம்கள் பொய்யை மூலதனமாகக் கொண்டு தங்களது மேடைகளைப் பாதுகாப்பது போன்றவைகளினால் இஸ்லாத்தின் மேன்மையை ஒருபோதும் நிரூபிக்க முடியாது.

எனவே, பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் படி நடந்தவாறு அஹ்மதிகளுக்கு தங்களது உண்மையின் தரத்தை உயர்த்துவதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இதன் மூலமாக இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்புவதற்கு எளிதான நிலை ஏற்பட வேண்டும். தப்லீக்கிற்கு நமது கூற்றும் நமது செயலும் ஒன்றாக இருப்பது அவசியமாகும். செயலில் உண்மை இல்லை என்றால் மக்கள் மார்க்க போதனைகளையும் பொய்யாகவே கருதுவார்கள். இறைவனது இருப்பு உண்மையாகும். இஸ்லாம் மார்க்கம் உண்மை ஆகும். இந்த உண்மையை பரப்புவதும், உண்மையின் மூலமாக பரப்புவதும் இன்று நமது கடமையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்திற்கு சில நாட்களுக்கு முன்பாகவே அனைத்து மார்க்கங்களும் சீர்கெட்டுப் போயிருந்தது. மேலும் ஆன்மீகத்தை தொலைத்திருந்தார்கள் என்பதை அறிவுள்ள ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். எனவே நமது நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக வந்தார்கள். அவர்கள் தொலைந்து போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தார்கள். இந்த பெருமையில் நமது நபி (ஸல்) அவர்களோடு யாரும் இணையானவர் கிடையாது. அவர்கள் முழு உலகத்தையும் இருள் நிறைந்ததாக கண்டார்கள். பிறகு அன்னாரது வருகையினால் அந்த இருள் ஒளியாக மாறியது. எந்த சமுதாயத்தில் அவர்கள் தோன்றினார்களோ அந்த சமுதாயத்தில் ஷிர்க்கின் ஆடையை களைந்து ஏகத்துவத்தின் ஆடையை அணிய வைக்காத வரை அவர்கள் மரணிக்கவில்லை. இது மட்டுமல்லாமல் அந்த மக்கள் ஈமானில் மிக உயர்வான இடத்தை அடைந்தார்கள். மேலும் அவர்களிடம் அந்தப் பணி, உண்மை, கலப்பற்ற தன்மை, நிச்சய உறுதி

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company, Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

வெளிப்பட்டது. இதற்கு உதாரணம் வேறு எந்தவோர் இடத்திலும் காணக் கிடைக்காது. இந்த மகத்தான வெற்றி நமது நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறெந்த நபிக்கும் கிடைக்கவில்லை. அன்னாரின் நபித்துவத்திற்கு இந்த ஓர் ஆதாரமே போதுதானதாகும். அதாவது, அன்னார் எப்படிப்பட்ட காலத்தில் தோன்றினார்கள் என்றால் அது மிகப்பெரும் இருள் நிறைந்த காலமாக இருந்தது. இயல்பாகவே ஒரு சீர்திருத்தவாதியின் தேவையை எதிர்பார்த்திருந்தது. மேலும் அன்னார் எப்படிப்பட்ட நேரத்தில் இவ்வுலகை விட்டுச் சென்றார்கள் என்றால் லட்சக்கணக்கான மக்கள் ஷிர்க்கையும், சிலைகளை வணங்குவதையும் விட்டு விட்டு ஏகத்துவத்தையும், நேர்வழியையும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். உண்மையின் இந்த சீர்திருத்தம் என்பது அன்னாரின் மூலமாகவே ஏற்பட இருந்தது.

ஏனென்றால் அன்னார் காட்டுமிராண்டித் –தனமான இயல்பை கொண்ட மக்களுக்கு மனிதர்களுக்குரிய பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால், காட்டுமிராண்டிகளை மனிர்களாகவும், மனிதர்களை கல்வி கற்ற மனிதர்களாகவும், பிறகு கல்வி கற்ற மனிதர்களை இறைவன் வரை சென்றடையக்கூடிய மக்களாகவும் மாற்றினார்கள். மேலும் ஆன்மீகத்தின் ஆன்மாவை அவர்களிடம் ஊதினார்கள். மேலும் உண்மையான இறைவனோடு அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தினார்கள். (லெக்ஸர் சியால்கோட். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 206-207)

எனவே, உண்மையான முஸ்லிம் என்று அழைக்கப்பட வேண்டுமென்றால், உண்மையான இறைவனோடுள்ள தொடர்பை ஏற்படுத்தக் கூடியவராக ஆக வேண்டுமென்றால் பிறகு உண்மையின் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியமாகும். இதன் உரிமையை எவராவது செலுத்த முடியுமென்றால் அதை அஹ்மதிகளால் மட்டுமே செலுத்த முடியும். ஏனென்றால் அவர்கள் காலத்தின் இமாமிடம், நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்று உடன்படிக்கை செய்துள்ளார்கள்.

எனவே இதை உடன்படிக்கையோடு மட்டும் விட்டு விடாதீர்கள். மாறாக, ஒவ்வொரு அஹ்மதியின் செயலும் இதற்கு சாட்சியாக இருக்க வேண்டும். அப்போது தான் இந்த உடன்படிக்கையின் உண்மைத்துவம் வெளிப்படும்.

இன்னொரு சிறந்த நல்லொழுக்கம் என்னவென்றால் அது பணிவு மற்றும் தாழ்மைக் குணம் ஆகும். இன்னும் சொல்வதென்றால், பணிவு மற்றும் தாழ்மைக் குணத்திலும் அன்னாரது முன்மாதிரி உச்சத்தை எட்டியது என்றே கூறலாம்.

பெருமானார் (ஸல்) அவர்களது பணிவு மற்றும் தாழ்மைக்குணம் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபாக்கள் மற்றும் வீட்டில் உள்ளவர்களில் யாராவது அன்னாரை அழைத்து அதற்கு அன்னார் பதில் கொடுக்காமல் ஒருபோதும் இருந்ததே கிடையாது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதனால்தான் திருக்குர்ஆனில் அல்லாஹ் إِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ அதாவது நீர் மிக உயர்வான நல்லொழுக்கத்தை கொண்டவராக இருக்கின்றீர் என்று கூறுகின்றான். **(68:5)**

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் யார் பக்கமாவது திரும்பினால் முழுவதுமாக திரும்புவார்கள். அவர்களது பார்வை எப்போதும் தாழ்ந்தே இருந்தது. தரை பக்கமே அன்னாருக்கு அதிகம் பார்வை படும் அளவிற்கு அது இருந்தது. சந்திக்கக்கூடிய ஒவ்வொருவரிடமும் ஸலாம் கூறுவதில் அவர்கள் முந்திக் கொள்வார்கள்.

அன்னார் கூறினார்கள்: நான் ஆதமின் சந்ததிகளின் தலைவன் ஆவேன். ஆனால் இதில் பெருமை கொள்வதற்கு எந்தவொரு விஷயமும் அல்ல. கியாமத் நாள் அன்று சிபாரிசு செய்யக் கூடியவர்களில் நான் முதன்மையானவனாக இருப்பேன். மேலும் எனது சிபாரிசு தான் முதன்மையானதாக ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் இதில் பெருமை கொள்வதற்கு எந்தவொரு விஷயமும் அல்ல. மேலும் கியாமத் அன்று புகழின் கொடி என் கையில் இருக்கும். ஆனால் இதில் எவ்வித பெருமையும் கிடையாது. (சுனன் இப்னு மாஜா. கிதாபுஸ் ஸுஹது பாபு ஸிக்ருஸ் ஸிபா அதி ஹதஸ் 4308)

இது அன்னாரது பணிவின் உச்சகட்ட வெளிப்பாடாகும். அன்னாரது ஒவ்வொரு கூற்றிலும் செயலிலும் அது வெளிப்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமையடித்தலில் இருந்தும், தேவையில்லாத கர்வத்திலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் எளிமையையும், தாழ்மை குணத்தையும் கடைபிடிக்க வேண்டும். பாருங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே உயர்ந்த அந்தஸ்தை உடையவர்களாக இருந்தார்கள். அவர்களது பணிவு மற்றும் தாழ்மைகுணம் பற்றி திருக்குர்ஆனில் உள்ளது.

எழுதப்பட்டுள்ளது. பார்வையற்ற ஒருவர் அன்னாரிடம் திருக்குர்ஆன் கற்று வந்தார். ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் மக்காவின் தலைவர்கள் அமர்ந்திருந்தார்கள். அன்னார் அவர்களோடு பேசுவதில் மூழ்கியிருந்தார்கள். நீண்ட நேரம் பேசுவதிலியே கழிந்ததால் பார்வையற்ற அந்த நபர் எழுந்து சென்று விட்டார். இதுவொரு சாதாரண விஷயம் தான். ஆனால் அல்லாஹ் இது தொடர்பாக ஒரு சூராவையே இறக்கினான். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவரது வீட்டிற்குச் சென்றார்கள். மேலும் அவரை தன்னோடு அழைத்து வந்து தனது போர்வையை விரித்து அதில் அமரச் செய்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையான விஷயம் என்னவென்றால், எவர்களது உள்ளத்தில் இறைவன் மீதான கண்ணியம் இருக்குமோ அவர்கள் எளியவராகவும், பணிவானவராகவும் ஆக வேண்டும். நிச்சயமாக எளிமையையும் தாழ்மைக் குணத்தையும் கடைபிக்க வேண்டியது வருகிறது. ஏனென்றால் அவர்கள் இறைவனது தன்னிறைவுத் தன்மைக்காக ஏங்கியவர்களாகவும், அஞ்சியவர்களாகவும் இருக்கின்றனர். எவ்வாறு இறைவன் வாரி வழங்கக் கூடியவனாக இருக்கின்றானோ அவ்வாறே யார் மீது அவன் கோபம் அடைகின்றானோ அவர்களது அனைத்தையும் ஒரு நொடியில் அழித்து விடக்கூடியவனாகவும் இருக்கின்றான். எனவே இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் இதை நினைவில் வைத்திருங்கள். மேலும் அதற்கேற்ப செயல்படுங்கள். (மல்∴பூஸாத் தொகுதி 10 பக்கம் 343-344; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னாரது வாழ்க்கை மற்றும் நல்லொழுக்கம் தொடர்பான விஷயங்கள் ஒருபோதும் முடிவுறாததாகும். ஒவ்வொரு பண்பிலும் அன்னாரது முன்மாதிரிகள் வியக்கத்தக்கதாகும். ஏன் அவ்வாறு இருக்கவும் கூடாது? ஏனென்றால் அன்னார் முழுமை பெற்ற ஒரு ஆசிரியர் ஆவார்கள். மேலும் நல்லொழுக்கமுடைய ஆசிரியர் ஆவார்கள்.

ஒரு தீய நபர் கூட அன்னாரிடம் வந்தால் அன்னார் அவரிடமும் கூட நல்ல முறையிலேயே நடந்தார்கள். ஹஸ்ரத் ஆயீஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வர அனுமதி கோரினார். அன்னார் அவரைப் பார்த்து இவர் தனது குடும்பத்தில் மிகவும் தீய சகோதரர் ஆவார். சகோதரர் என்ற முறையில் இவரது நடைமுறை சிறந்தது கிடையாது. மேலும் தனது குடும்பத்தில் மிகவும் தீய மகனாவார் என்று என்னிடம் கூறினார்கள். அவர் வந்து உட்கார்ந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அவரிடம் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்தியவாறு அவர் குடும்பத்தில் தீய மகனாகவும், தீய சகோதரராகவும், தீய நல்லொழுக்கத்தை உடையவராக இருந்த போதிலும் அவரிடம் மகிழ்ச்சிகரமான சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினார்கள். அன்னார் அவரிடம் மிகவும் சிறந்த நல்லொழுக்கத்தோடு உரையாடினார்கள்.

அவர் சென்ற பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் அவரைப்

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

பார்த்தபோது அவரைப் பற்றி இன்ன இன்ன விஷயங்களை எல்லாம் கூறினீர்கள். ஆனால் அவரோடு உரையாடும்போது மிகவும் பரந்த மனப்பான்மையோடு உரையாடினீர்களே என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! நீ எப்போது என்னை தீய வார்த்தைகளை கூறக் கேட்டாய். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் கியாமத் நாள் அன்று தீய மனிதர் யார் என்றால் அவரது தீமையின் காரணமாக மக்கள் அவரை சந்திப்பதை விட்டு விடுவர் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் அதப் பாபு லம் யகுன்னபீ ஃபாஹிஷன் வலா முதஃபஹ்ஹிஷன் ஹதீஸ் 6032)

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னாரிடம் நபிகள் நாயகமே! நான் நன்மை செய்கின்றேனா? அல்லது தீமை செய்கின்றேனா? என்பது எனக்கு எப்படி தெரியும் என்று கேட்கப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது அண்டை வீட்டுக்காரர் உங்களைப் பற்றி நீங்கள் நல்லவர் என்று கூற நீர் கேட்டால் உமது நடைமுறை நல்லது என்று புரிந்து கொள்ளுங்கள். ஆனால் உங்களது அண்டை வீட்டுக்காரர் உங்களைப் பற்றி நீங்கள் தீயவர் என்று கூற நீர் கேட்டால் அப்போது நீங்கள் தீயவர் என்றும் உங்களது நடைமுறை சரியல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். (சுனன் இப்னு மாஜா கிதாபுஸ்ஸுஹது பாபுஸ்ஸனா வல் ஹுஸ்ன் ஹதீஸ் 4223)

எனவே நமது நல்லொழுக்க நிலைமை நாம் எப்போதும் சரியாக வைத்திருப்பது அவசியமாகும். இது தான் இன்று ஒரு அஹ்மதியின் முன்மாதிரியாக இருக்க வேண்டும். இன்று முஸ்லிம்களில் இருக்கின்ற குழப்பத்திற்கு இது தான் காரணமாகும். அதாவது அவர்களுடைய நல்லொழுக்க நிலையின் தரம் வீழ்ந்து விட்டது. பெருமானார் (ஸல்) அவர்களது முன்மாதிரியை மக்கள் விட்டு விட்டனர். வெறும் நாவளவில் மட்டுமே வாதம் செய்கின்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முழுமையான முன்மாதிரியைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து விஷயங்களுக்கும் முன்மாதிரியாக திகழ்கின்றார்கள். அன்னாரது வாழ்க்கைப் பாருங்கள். அன்னார் பெண்களோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள் ?

அன்னார் கூறுகின்றார்கள்: பெண்களுக்கு எதிராக நிற்கக்கூடிய அந்த ஆண் எனது பார்வையில் கோழையும், ஆண்மையற்றவரும் ஆவார். அன்னாரது தூய வாழ்க்கையை ஆய்வு செய்யுங்கள். அன்னார் எப்படிப்பட்டவர்களாக விளங்கினார்கள் என்றால், அன்னார் கம்பீரமானவராக இருந்தபோதிலும் அன்னாரை ஒரு வயதான பெண்மணி நிற்கும்படி கூறினாலும் அந்த வயதான பெண்மணி அனுமதி கொடுக்காத வரை அன்னார் அங்கேயே நின்று கொண்டிருப்பார்கள். அந்த இடத்தை விட்டுச் செல்ல மாட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பொருட்களை தாங்களே வாங்கிக் கொண்டு வருவார்கள்.

ஒரு முறை அன்னார் கொஞ்சம் பொருட்களை வாங்கியபோது ஒரு சஹாபி அன்னாரிடம், என்னிடம் கொடுங்கள் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் யாருடைய பொருளோ அவர் தான் அதை தூக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதிலிருந்து அன்னார் விறகுக் கட்டைகளை தூக்கி வந்தார்கள் என்பது பொருளல்ல. அவர்கள் கூறுகின்றார்கள் : இந்த சம்பவங்களிலிருந்து அன்னாரது எளிமை, உயர் தரத்திலான பகட்டின்மை தெரிய வருகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 44-45; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது நபி (ஸல்) அவர்களைப் பாருங்கள். அவர்களது நபித்துவத்தின் 13 ஆண்டு காலம் கஷ்டங்களாலும், துக்கத்தாலும் நிரம்பி இருந்தது. மேலும் பத்து வருடங்கள் ஆற்றல்கள் மற்றும் ஆட்சி அதிகாரம் நிறைந்ததாக இருந்தது. எதிர்ப்பில் பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இருந்தார்கள். முதன்மையின் அன்னாரது சமுதாயமே நின்றது. யூதர்கள், கிறித்தவர்கள் மற்றும் சிலையை வணங்கக் கூடிய கூட்டமும் இருந்தது. மேலும் நெருப்பை வணங்கக் கூடியவர்கள் ஆகியோரும் இருந்தனர். அவர்களுடைய பணி என்னவாக இருந்தது? சிலையை வணங்குவதாகவே இருந்தது.

இவர்களுக்கு இந்த சிலையின் மகத்துவத்தின் மீது இருந்த கொள்கைப் பிடிப்பின் காரணமாக இதற்கு எதிராக எந்தவொரு செயலையும் இவர்கள் செய்வதே கிடையாது. மதுவை தினமும் ஐந்து அல்லது ஏழு முறை அருந்தக் கூடியவர்களாக இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் தண்ணீருக்குப் பதிலாக மதுவையே இவர்கள் பயன்படுத்தி வந்தனர். ஹராமை இவர்கள் தாய்ப்பாலாகக் கருதி வந்தார்கள். கொலை மற்றும் கொள்ளையடிப்பது போன்ற செயல்கள் அவர்களது பார்வையில் கேரட்டையும் முள்ளங்கியையும் போன்றதாக இருந்தது.

உலகத்திலுள்ள அனைத்து சமுதாயங்களின் விஷயங்களும் தவறான கொள்கையின் ஊற்றாக அவர்களுடைய பங்கில் வந்திருந்தது. இந்த சமுதாயத்தை சீர்திருத்துவது மற்றும் அவர்களை சரி செய்வது அவர்களின் பணியாக இருந்தது. மேலும் அவர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு காலமும் வந்தது என்றால் தனிமையில் அவர்கள் எந்த ஒரு நண்பரும், உதவியாளரும் இன்றி சுற்றித் திரிந்தனர். மேலும் சில நேரங்களில் உண்ண ஏதாவது கிடைக்கும். இல்லையென்றால் பசியோடு தூங்கினார்கள். அதாவது மக்காவில் மிகவும் கொடுமையான நிலைமை இருந்தது. பட்டினியாக இருக்க வேண்டிய நிலைமை இருந்தது. முஸ்லிமாக ஆனவர்கள் மீது அனுதினமும் அடி விழுந்தது. அவர்கள் அடி வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் இங்கும் ஆதரவற்றவர்களாக சுற்றித் திரிந்தனர். நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடையே எப்படிப்பட்ட மற்றொரு ஒரு காலமும் வந்தது என்றால் அரபு நாட்டிலுள்ள ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதி வரை உள்ள அனைவருமே அடிமையாக ஆகி விட்டார்கள். எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் எவரும் எந்தவொரு கூற்றையும் கூற முடியாது. எப்படிப்பட்ட ஆற்றலையும், திகிலையும் இறைவன் கொடுத்திருந்தான் என்றால் அவர்கள் விரும்பியிருந்தால் அரபு நாட்டிலுள்ளவர்கள் அனைவரையுமே கொன்று குவித்திருக்கலாம். மன இச்சைகளை பின்பற்றக் கூடிய ஒரு நபராக இருப்பாரேயானால் முந்தைய காலத்தில் அவர்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு பழி தீர்ப்பதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகவும் அது இருந்தது. ஆனால் அன்னார் மக்காவை வெற்றி கொண்ட போது لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ என்று கூறினார்கள்.

ஆக இவ்வாறு இந்த இரண்டு காலகட்டமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்நாளில் வந்தது. மேலும் இந்த இரண்டு காலகட்டமும் அன்னாரை பற்றி நன்கு பரிசோதித்துப் பார்ப்பதற்கான சிறந்த வாய்ப்பாக இருந்தது. உடனடியாக விரைந்து அன்னாரைப் பற்றி முடிவெடுக்க வேண்டிய நிர்பந்தம் இருக்கவில்லை.

மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அனைத்து விதமான நல்லொழுக்கம் தொடர்பாகவும் பரீட்சையும் முழுமை பெற்றிருந்தது. மேலும் அன்னாரது பொறுமை, நிலைத்து நிற்றல், மென்மை, பணிவு, எளிமை, வீரம், வள்ளல் தன்மை போன்ற அனைத்து விதமான நல்லொழுக்கமும் வெளிப்பட்டு விட்டன. மேலும் எந்தவொரு அம்சமும் எஞ்சியிருக்கவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 195-196; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆக, இன்று உண்மையான மகிழ்ச்சியை கொண்டாட வேண்டுமென்றால் அன்னாரது முன்மாதிரியின் படி நடந்தவாறே மகிழ்ச்சியை கொண்டாட முடியும். அத்துடன் இறை வணக்கத்தின் தரமும் உயர்வானதாக இருக்க வேண்டும். ஏகத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும். உயர்ந்த நல்லொழுக்கத்தின் தரமும் உயர்வானதாக இருக்க வேண்டும். இது இல்லையென்றால் நமக்கும் மற்றவர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் கிடையாது.

நாம் இதன் படி செயல்படவில்லையன்றால் சிதறுண்டு கிடக்கின்ற அம்மக்களுக்கும், தற்காலிக தலைவர்கள் மற்றும் பெயர் தாங்கிய ஆலிம்களுக்குப் பின்னால் சென்றவாறு மக்களுக்கு துன்பத்தை கொடுக்கின்றவர்–களுக்கும் நமக்கும் எவ்வித வித்தியாசமும் இருக்காது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருப்பது நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றது என்றால், ஒவ்வொரு பணியிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரியை நாம் கண் முன் நிறுத்த வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர்ந்த அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த மனிதர் முழுமை பெற்ற மனிதராக திகழ்ந்தார்கள். மேலும் முழுமை பெற்ற நபியாக திகழ்ந்தார்கள். அவர் முழுமையான அருளோடு வந்தார்கள். அவர் மூலமாக ஆன்மீக வருகை மற்றும் முடிவால் உலகத்தில் முதல் கியாமத் வெளிப்பட்டது. அவரது வருகையினால் மரணித்துப்போன உலகம் உயிர் பெற்றது. அந்த அருளுக்குரிய நபி, நபிமார்களுக்கெல்லாம் தலைவர், இமாமுல் அஷ்ஃபியா (தூய்மை –யானவர்களுக்கெல்லாம் தலைவர்), காத்தமுல் முர்ஸலீன் (நபிமார்களின் முத்திரை) ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

எனது அன்பிற்குரிய இறைவா! இந்த அன்பிற்குரிய நபியின் மீது உலகம் தோன்றிய நாள் முதல் எவர் மீது நீ பொழிந்திராத அருளையும், சாந்தியும் இறக்குவாயாக. இந்த மகத்தான நபி உலகிற்கு வராமல் இருந்திருந்தால் உலகத்தில் வந்த சிறிய சிறிய நபிமார்களான யூனுஸ், அய்யூப், மஸீஹ் இப்னு மர்யம், மலாக்கி, யஹ்யா மற்றும் ஸகரிய்யா போன்றோர்கள் இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும், இறைவனது அன்பிற்குரியவர்களாகவும் இருந்தும் கூட அவர்களின் உண்மைத்துவத்திற்கான எந்தவொரு ஆதாரமும் நம்மிடம் இருக்கவில்லை. இந்த நபிமார்களும் உலகில் உண்மையாளர்களாக கருதப்பட்டது அந்த நபியின் பேருபகாரமாகும்.

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ وَاٰلِهٖ وَ اَصْحَابِهٖ اَجْمَعِيْنَ۔
وَاٰخِرُ دَعْوَانَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

(இத்மாமுல் ஹுஜ்ஜா. ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 308)

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அமெரிக்காவைச் சார்ந்த சிஸ்டர் சல்மா கனி சாஹிபா உடையதாகும். இவர்கள் ஃபிலடெல் –ஃபியாவில் வசித்து வந்தார்கள். 20 நவம்பர் அன்று 83 –வது வயதில் அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அமெரிக்காவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 1960 –ல் தனது 26 –வது வயதில் இவர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். இவர்கள் ஆசிரியை ஆவார்கள். 1975, 1976 –ஆம் ஆண்டுகளில் இவர்களுக்கு ரப்வாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அங்கு நடந்த சம்பவங்கள் மற்றும் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களை சந்தித்த அனுபவத்தை மிகவும் மகிழ்ச்சியோடு எடுத்துக் கூறுவார்கள். இவர்களுக்கு ஏறக்குறைய 15 வருடங்கள் அமெரிக்காவின் சதர் லஜ்னாவாக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத் –திருந்தது. அங்கு அவர்கள் பெரும் முயற்சி யுடன் பணியாற்றினார்கள். லஜ்னா இமாயில்லாஹ் அமெரிக்காவை ஒரு புதிய எல்லை வரை கொண்டு சென்றார்கள். அவர்களுக்கு பல முறை ஃபிலடெல் –ஃபியாவின் சத்ர் லஜ்னாவாக தொண்டாற்று –வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

மர்ஹூமா ஐந்து நேரத் தொழுகை மட்டுமன்றி தஹஜ்ஜுத் தொழுகையையும் குறிப்பாக பேணி வந்தார்கள். எப்போதும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு வந்தார்கள். அவர்களுக்கு ஃபிலடெல்ஃபியாவில் பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும் என்ற மிகப்பெரிய ஆசை இருந்தது. அதற்காக அவர்கள் துஆ செய்தும் வந்தார்கள். இன்ஷா அல்லாஹ் விரைவில் பணி முழுமையடைந்து விடும் என்று நம்புகின்றேன்.

மதிப்பிற்குரிய அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: உள்ளூர் ஜமாஅத்தின் சதர் சாஹிப் அவர்களது கூற்று என்னவென்றால், ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில் எனக்கு முழுமையாக கட்டுப்படுபவராக விளங்கினார்கள். எல்லா விதமான செயல்களையும் பகிர்ந்து கொள்வார்கள்.

சதர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டு மாதத்திற்கு முன்பு இவர்களுக்கு வயிற்றில் கேன்ஸர் நோய் இருப்பது தெரிய வந்தது. வஃபாத் ஆவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நான் சந்திக்க சென்ற போது அவர்கள் கூறினார்கள். எனது வஸிய்யதை கேளுங்கள். டாக்டர் 4 அல்லது 6 மாதங்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் சில நாட்களே எஞ்சியுள்ளன. ஜனாஸா நீங்கள் தொழ வைக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு அதிகமாக யாரையும் எதிர்பார்த்து இருக்க கூடாது. வில்லிங் பவர் பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை நடை பெற வேண்டும். கபருக்கான ஏற்பாடு ஃபிலடெல் –ஃபியாவில் செய்யப்பட்டு விட்டது.

மர்ஹூமாவிற்கு எந்த சந்ததிகளும் கிடையாது. அவர்களுடைய குடும்பத்தில் எந்தவொரு அஹ்மதி முஸ்லிமும் கிடையாது. ஆனால் அவர்களுடைய சகோதர சகோதரிகளோடு மர்ஹூமா அவர்கள் சிறந்த முறையில் நடந்து கொண்டார்கள்.

அமெரிக்காவின் சதர் லஜ்னா எழுதுகின்றார்கள்: கிறித்தவ சுற்றுச் சூழலில் அவர் வளர்க்கப்பட்டாலும் அவர்களிடத்தில் 15 வயதில் இருந்தே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை மரணம் மற்றும் தவறான கொள்கையான பாவமன்னிப்பு தொடர்பாக கேள்விகள் எழ ஆரம்பித்தது. அவர்களது உள்ளத்திற்கு சாந்தி சமாதானம் தரக்கூடிய ஒரு மார்க்கத்தை தேடி வந்தார்கள். அந்த ஆர்வத்திலேயே இவர்கள் கத்தோலிக்கம் தொடர்பாக ஆழ்ந்த ஆராய்ச்சியை செய்தார்கள். மேலும் இந்து மதம், புத்த மதம், மற்றும் கிறித்தவர்களின் இதர பிரிவுகளைப் பற்றியும் இவர்கள் ஆய்வு செய்தார்கள். எல்லா மார்க்கங் களிலும் நல்ல போதனையையே கண்டார்கள். ஆனால் எந்தவொரு மார்க்கமும் அவர்களது நோக்கத்தை பூர்த்தி செய்யக் கூடியதாக அமையவில்லை.

இந்த தருணத்தில் அவர்களது ஒரு நண்பர் சிறிது காலத்திற்கு முன்பு தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் இவர்களுக்கு ஒரு பிரசுரத்தை கொடுத்தார். அதில் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் மரணிக்க வில்லை என்று எழுதப்பட்டிருந்தது. அந்த பிரசுரத்தை கண்டதுமே அவர்களது கண்களில் கண்ணீர் வந்தது. மேலும் நான் இன்னொரு முறை உயிர் பெற்று விட்டேன் என்று கூறினார்கள்.

எனது உடலில் ஏதோவொரு பகுதி நீண்ட காலமாக செயலிழந்து போனது போன்றும் மீண்டும் உயிர் பெற்று விட்டது போன்றும் நான் உணர்ந்தேன் என்று கூறினார்கள். அந்த பிரசுரத்தில் அவர்களது உள்ளத்தில் எழுந்த எல்லா கேள்விகளுக்கும் பதில் இருந்தது. இதற்குப் பிறகு அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். அங்கு பல்வேறு நூல்களை வாங்கினார்கள். அவற்றை படித்தார்கள். இறுதியாக ஃபிலடெல்ஃபியாவில் பைஅத் செய்வதற்கான நற்பேற்றை பெற்றார்கள். அவர்கள் தனது இறுதி மூச்சு வரை அந்த இடத்திலேயே வசித்து வந்தார்கள்.

ஒரு முறை அவர்கள் அந்த பிரசுரத்தை பார்த்து இந்த பிரசுரத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் மரணிக்கவில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. இது நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணியாக அமைந்தது. மேலும் இது தான் உண்மையான மார்க்கமாகும் என்று கூறினார்கள்.

அஹ்மதி என்ற முறையில் 54 வருடங்கள் வாழ்க்கையை கழித்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் ஜமாஅத்துடனும், அஹ்மதிய்யா கிலாஃபத்துடனும் பரிசுத்த தன்மையுடனும், கலப்பற்ற தன்மையுடனும் மேலும் அன்பு, நேசத்தின் மிக உயரிய முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். கட்டுப்படுதலில் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாவார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் ஏறக்குறைய 15 வருடங்கள் அமெரிக்காவின் சதர் லஜ்னாவாக தொண்டாற்றும் நற்பேற்றை பெற்றார்கள். இதற்குப் பிறகு சிறப்பு உறுப்பினராக லஜ்னாவில் தொண்டற்றும் நற்பேற்றை பெற்றார்கள். அவர்களுக்கு ஆப்ரிக்கா மற்றும் அமெரிக்க டெஸ்க்கின் லஜ்னா முஷாவிரத் கமிட்டியின் தலைவியாக தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியமும் கிடைத்தது. அவர்களது உள்ளம் எப்போதும் தப்லீக்கின் பக்கம் அதிக கவனம் உடையதாக இருந்தது. அவர்களுடைய தொடர்பு கிறித்தவக் குடும்பத்தைச் சார்ந்ததாக இருந்ததினால் சரியான மற்றும் மிகுந்த ஞானத்தோடு கிறித்தவர்களுக்கு தப்லீக் செய்து வந்தார்கள். பலர் அதனால் பைஅத் செய்தனர். பலரது சீர்திருத்தத்திற்கு காரணியாக அமைந்தார்கள். எப்போதும் சகோதரத்துவம், அன்பு, நேசத்திற்கான போதனையையே வழங்கி வந்தார்கள். கானா மற்றும் நைஜீரியாவிற்கு பலமுறை அவர்கள் பயணம் செய்ததினால் அவர்கள் ஒவ்வோர் இடத்திலும் ஆன்ட்டி ஸல்மா கனி என்ற பெயரிலேயே அறியப்பட்டு வந்தார்கள்.

அமெரிக்க ஜமாஅத்தில் நிச்சயமாக இவர்கள் மிகவும் பரிசுத்தமான, அனைவருக்கும் பிரியமானவர்கள் என்ற வகையில் நினைவு கூறப்படுவார்கள். அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக. இவர்கள் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அல்லாஹ் அதில் நிலைத்து நிற்கும் பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை கேட்பதற்கும், அதை புரிந்து கொள்வதற்கும் அமெரிக்க மக்களுக்கு அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

# ஜுமுஆ பேருரை

இவ்விஷயத்தை ஒரு முஃமின் எப்போதும் தன் முன்னால் வைத்திருக்க வேண்டும். அதாவது, உலகப் பொருள்கள் மீதுள்ள ஆசை இறைவனையே மறக்கடித்து விடக்கூடாது. தற்போது முஸ்லிம் நாடுகளில் காணப்படும் குழப்பங்கள் அனைத்திற்கும் இதுதான் காரணம். அதாவது, அல்லாஹ் மார்க்கத்தில் இருந்து விலகியுள்ள உலகில்வாதிகளைப் பற்றி கூறியவை அனைத்தும் முஸ்லிம்களிடம் உள்ளது. தலைவர்கள் செல்வத்தைச் சேர்ப்பதற்கும் பொதுமக்களுக்கு தொண்டு செய்வதாக முழக்கமிட்டுக் கொண்டும் ஆட்சிக்கு வருகின்றனர். பிறகு இரு கைகளால் கொள்ளை அடிப்பது கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக உள்ளது. ஆலிம்களுக்கு, மக்களின் மார்க்க மேம்பாடு குறித்த கவலை குறைவாக உள்ளது. அசல் முயற்சி மார்க்கத்தின் பெயரால் மக்களை தமக்கு பின்னால் வரவைப்பதும் எப்படியாவது ஆட்சியைப் பிடிப்பதும் அல்லது ஆட்சியில் இருந்து பயன்பெறுவதும் செல்வத்தை குவிப்பதும் ஆகும். அல்லாஹ்வின் பெயரை கூறுகிறார்கள். ஆனால் அவர்களின் செயலில் அல்லாஹ்வின் அச்சம் வெளிப்படவே இல்லை. பாகிஸ்தானில் பொதுவாக இந்த நிலையை நாம் பார்க்கின்றோம்.

அல்லாஹ் இந்த ஆட்சியாளர்களுக்கும், அரசர்களுக்கும், இந்த சுயநலவாதிகளுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் செல்வத்தைச் சேர்ப்பதற்கு பதில் செல்வத்தை சரியான முறையில் பயன்படுத்துவார்களாகவும் ஆவார்களாக. இதனால் இறைவனது திருப்தியும் கிடைக்கும். உலகியல் ரீதியாகவும் இவர்களுக்கு ஒரு சக்தி கிடைக்கும்.

நம்பிக்கை கொண்ட ஒருவரின் பணி இந்த உலகியல் பொருள்களில் பெருமை கொண்டு அவற்றைப் பெறுவதற்காகவே தனது எல்லா முயற்சிகளையும் செலவழிப்பதற்குப் பதில் அல்லாஹ் உடைய மன்னிப்பையும் திருப்தியையும் அவர் தேட வேண்டும் என்பதாகும்.

சிலர் பொருள்கள் சந்ததிகள், சக்தி, ஆட்சி இவற்றை இறைவனுக்கு எதிராக கடவுளாக்கி விடுகின்றான். இன்னும் சிலர் பெரிய நாடுகளின் நட்பிலிருந்து பயனடைய விரும்புகின்றனர். இவை அனைத்தும் முடிந்து போகக் கூடியவையாகும்.

முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் உலகியல் ஆசைகளின் பின்னால் செல்கின்றனர். அவர்கள் செயல் ரீதியாக பெரும் சக்திகளை தமது கடவுளாக்கி இருக்கிறார்கள். அவர்களின் நட்புதான் நமக்கு நிலைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு உத்திரவாதம் தரும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வின் புறமிருந்து அழிவு வந்தால் உலகியல் நட்புகள் ஒன்றுக்கும் உதவாது. பெரிய சக்திகளின் மீது அமெரிக்காவின் மீது இது ஆரம்பமாகி விட்டதாக தோன்றுகிறது. என்ன விளைவு ஏற்படும் என்பதை இறைவனே அறிவான். ஆனால் முஸ்லிம்கள் தமக்குள் சண்டையிடுவது இந்த சூழ்நிலையை இன்னும் அதிகமாக்கும். எனவே நாம் முஸ்லிம் நாடுகளுக்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக.

எல்லாவற்றிற்கும் மேல் நாம் துஆ செய்ய வேண்டும். முஸ்லிம்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடன் இணைந்துதான் அவர்கள் தமக்கிடையிலும் உலகிலும் அமைதியை நிலைநாட்டுபவர்களாக ஆக முடியும்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**8 டிசம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **8 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوٰتِ مِنَ النِّسَآءِ وَالْبَنِيْنَ وَالْقَنَاطِيْرِ الْمُقَنْطَرَةِ مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْاَنْعَامِ وَالْحَرْثِ ؕ ذٰلِكَ مَتَاعُ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الْمَاٰبِ

இந்த வசனத்தின் பொருள்: விரும்பப் –படுகின்ற பொருள்களாகிய பெண், ஆண் மக்கள், பாதுகாக்கப்பட்ட பொன் வெள்ளிகளின் கருவூலங்கள், அழகு வாய்ந்த குதிரைகள், கால்நடைகள், வேளாண்மை ஆகியவற்றின் மீதுள்ள நேசம் மக்களுக்கு அழகாக்கப் –பட்டுள்ளது. இது உலக வாழ்க்கைக்குத் தேவையான பொருளாகும். அல்லாஹ்விடத்திலோ மிகவும் மேலான தங்குமிடம் உள்ளது. (3:75)

அல்லாஹ் அவனை மறந்து விடுபவர்களைப் பற்றி அவர்களின் நிலைமைகளை இந்த வசனத்தில் கூறுகிறான். உலகியல் நோக்கங்களே அவர்களின் இலக்காக இருக்கிறது. மனிதன் இறைவனை மறந்து விட்டான் எனில் ஷய்த்தான் அவனிடம் ஆதிக்கம் செலுத்துகிறான். இவை அனைத்தும் இறைவனால் உருவாக்கப்பட்டவை தான். அல்லாஹ்வின் அருள்களில் உள்ளவை தான். அவற்றிலிருந்து பயனடையவும் வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் தெளிவாகவே கூறியுள்ளார்கள். இந்த உலகியல் நடவடிக்கைகளில் இருந்து விலகி விடுவது தவறாகும். திருமணமும் செய்ய வேண்டும். அது சுன்னத் ஆகும். அதுபோன்று பிற வேலைகள் உள்ளது. அவற்றை சஹாபக்களும் செய்தார்கள். கோடிக்கணக்கில் அவர்களிடம் சொத்துக்கள் இருந்தது. சில சஹாபாக்களிடம் அவ்வாறு இருந்தது. ஆனால், அவர்கள் உலகவாதிகளாக இருக்கவில்லை. உலகின் மீது அவர்களுக்கு ஈர்ப்பு இருக்கவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் முற்றிலும் உலகை விட்டு விட வேண்டும் என்பது இறைவனது விருப்பம் அல்ல. மாறாக, அவனது விருப்பம், கத் அஃப்லஹ மன் ஸக்காஹா – எவர் தனது நஃப்ஸை தூய்மையாக்கிக் கொண்டாரோ அவர் தனது நோக்கத்தை அடைந்து விட்டார். வணிகம் செய்யுங்கள்; விவசாயம் செய்யுங்கள்; வியாபாரம் செய்யுங்கள். ஆனால், உங்கள் நஃப்ஸை இறைவனுக்கு கட்டுப்படாமையில் இருந்து தடுத்து வையுங்கள். அவையெல்லாம் உங்களை இறைவை விட்டும் கவனமற்றவர்களாக ஆகி விடாத அளவுக்கு நஃப்ஸை தூய்மைப்படுத்துங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 260-261; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: நஃப்ஸின் உரிமைகள் அனுமதிக்கப்பட்டவை ஆகும். ஆனால், நஃப்ஸின் நடுநிலைமை தவறுதல் அனுமதிக்கப்பட்டதல்ல. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 248; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆகவே, இவ்விஷயத்தை ஒரு நம்பிக்கை கொண்டவர் எப்போதும் தன் முன்னால் வைத்திருக்க வேண்டும். அதாவது, உலகப் பொருள்கள் மீதுள்ள ஆசை இறைவனையே மறக்கடித்து விடக்கூடாது. இந்த வசனத்தில் இறைவனே கூறுவது زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوٰتِ அதாவது, அதிக அளவில் நேசம் கொள்வது மக்களுக்கு அழகாக்கிக் காட்டப்பட்டுள்ளது. பிறகு அதன் விபரம் கூறப்படுகிறது. என்னென்ன பொருள்கள் எல்லாம் உள்ளன? அவற்றை மனிதன் வாழ்வைக் கழிப்பதற்காக மட்டும் விரும்புவதில்லை. மாறாக, அம்மக்கள் உலகப் பொருள்களின் ஆசையில் மூழ்கி உள்ளனர். அவற்றைப் பெற வேண்டும் என்பது மட்டுமே

அவர்களின் விருப்பமாக இருக்கிறது. ஷஹ்வா என்பதன் பொருள், ஒரு பொருளின் மீது அளவு கடந்த நேசம் கொள்வதாகும். அதனையே எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பது. அதற்கு இன்னொரு பொருள், எந்த நோக்கம் மனிதனது மனதின் ஆசையை மட்டும் சார்ந்திருக்குமோ அல்லது எதன் மீதுள்ள விருப்பம் மனிதனுக்கு அதிகமாக உள்ளதோ அதுவாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: இப்பொருள்களின் விருப்பம் மனித உள்ளத்தில் போடப்பட்டுள்ளது. அது அல்லாஹ்வினால் போடப்படவில்லை. இந்த விருப்பம் அப்பொருளிலிருந்து பயன் அடைவதில்லை. மாறாக, இது ஷய்த்தானிடம் இருந்து போடப்பட்டுள்ளது. இது பொதுவான விருப்பம் அல்ல; அழகானதும் அல்ல. மாறாக, இந்த விருப்பங்கள் எந்த அளவுக்கு இருக்கிறது எனில் அதனை பெறுவதற்காக மனிதன் எப்போதும் நிம்மதி இழந்து தவிக்கிறான். அசாதாரண விருப்பத்தை இந்த உலகியல் பொருள்களின் மீது வைக்கிறான். மனிதன் எந்த அளவுக்கு இந்த ஆசையில் மூழ்கி விடுவானோ அந்த அளவுக்கு அது அல்லாஹ்வுடைய அருளாகவும் இல்லாமல் ஆகி விடும். மாறாக, அது ஷய்த்தானின் விருப்பமாக இருக்கிறது. பிறகு அதனை பெறுவதற்காக மனிதன் எல்லா அனுமதியற்ற ஆயுதங்களையும் பயன்படுத்தத் தேவைபட்டால் பயன்படுத்துகிறான். இதனை நாம் பொதுவாக உலகவாதிகளிடம் பார்க்கிறோம். செல்வத்திற் –காகவும் உலகியல் பதவிகளுக்காகவும் பெண்களுடன் தவறான தொடர்பு வைப்பதற்காக –வும் இவர்கள் எல்லா வரம்புகளையும் மீறுகின்றனர் அல்லது திருமணம் செய்கிறார்கள். அதுவும் செல்வம் சேர்ப்பதற்காக செய்கின்றனர். பொருள் வசதியுள்ள மனைவியைக் கொண்டு வருவது அவர்களுக்கு விருப்பமாக இருக்கிறது. அதேபோன்று மற்ற பணிகளிலும் உலகம் மட்டுமே நோக்கமாக இருக்கிறது.

முஸ்லிம்களுக்கு அல்லாஹ் அழகிய தூய போதனையை வழங்கியுள்ளான். எச்சரித்தும் உள்ளான். இவ்விஷயத்திலிருந்து விலகுங்கள். அவை மட்டும் உங்கள் வாழ்வின் நோக்கமாக ஆகி விடும் அளவுக்கு இதில் மூழ்கி விடாதீர்கள். ஏனெனில், இவை உலகில் தற்காலிகப் பொருள்களாகும். நீங்கள் சிந்தியுங்கள். நீங்கள் அவன் முன் வரவேண்டியதிருக்கிறது என்று எச்சரித்துள்ளான்.

இருந்தும் கூட முஸ்லிம்கள் அவற்றின் பின்தான் செல்கின்றனர். பெரும்பாலார் அவ்வாறு இருப்பதை பார்க்கிறோம். அவர்கள் தமது வாழ்வின் நோக்கத்தை மறந்து விட்டார்கள். ஆலிம்களும் சரி, சமுதாயத்தின் தலைவர்களும் சரி, ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கிடைக்கும் அளவுக்கு இந்த உலகப் பொருள்களைடப பெற வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருக்கிறது. இந்த ஆசைகள் சமுதாயத்தின் தலைவர்களிடம் உருவாகும்போது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் நாசம் ஏற்படுகிறது. தற்போது முஸ்லிம் நாடுகளில் காணப்படும் குழப்பங்கள் அனைத்திற்கும் இதுதான் காரணம். அதாவது, அல்லாஹ் மார்க்கத்தில் இருந்து விலகியுள்ள உலகில்வாதிகளைப் பற்றி கூறியவை அனைத்தும் முஸ்லிம்களிடம் உள்ளது. தலைவர்கள் செல்வத்தைச் சேர்ப்பதற்கும் பொதுமக்களுக்கு தொண்டு செய்வதாக முழக்கமிட்டுக் கொண்டும் ஆட்சிக்கு வருகின்றனர். பிறகு இரு கைகளால் கொள்ளை அடிப்பது கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக உள்ளது. ஆலிம்களுக்கு, மக்களின் மார்க்க மேம்பாடு குறித்த கவலை குறைவாக உள்ளது. அசல் முயற்சி மார்க்கத்தின் பெயரால் மக்களை தமக்கு பின்னால் வரவைப்பதும் எப்படியாவது ஆட்சியைப் பிடிப்பதும் அல்லது ஆட்சியில் இருந்து பயன்பெறுவதும் செல்வத்தை குவிப்பதும் ஆகும். அல்லாஹ்வின் பெயரை கூறுகிறார்கள். ஆனால் அவர்களின் செயலில் அல்லாஹ்வின் அச்சம் வெளிப்படவே இல்லை. பாகிஸ்தானில் பொதுவாக இந்த நிலையை நாம் பார்க்கின்றோம். முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம் பொது மக்களை காரட் மற்றும் முள்ளங்கிகளைப் போன்று வெட்டுகின்றனர். மனித உயிருக்கு எந்த மதிப்பும் இல்லை. ஆனால் ஆட்சியை மட்டும் விடுவதில்லை. பல நாடுகளில் இந்த நடைமுறை காணப்படுகின்றது. ஆட்சி செய்து கொண்டு தமது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும்; பொருளை சேர்த்துக் கொண்டே செல்ல வேண்டும் என்பதே அவர்களின் முயற்சியாக உள்ளது. இவர்களின் வயிறு எவ்வகையிலும் நிரம்புவதே இல்லை. முஸ்லிம்கள் நாடுகளில் செல்வங்களும் இயற்கைச் செல்வங்களும் இருந்தும் கூட இந்நிலை ஏற்பட காரணம் என்ன? அவர்கள் வறியவர்களிலும் வறியவராக ஆகிக் கொண்டே செல்கின்றனர். ஒருவேளை உணவு மிகவும் சிரமத்துடனேயே கிடைக்கிறது. சவூதி அரேபியா பெரும் செல்வச் செழிப்பான நாடு என்கின்றனர். அங்கும் வறுமை வளர்ந்து கொண்டுதான் போகிறது. முதலிலும் வறுமையில் இருந்தவர்கள் மேலும் வறியவர்களாகிக் கொண்டே போகின்றனர். எண்ணெய் வளம் இருந்தும் கூட வறுமை அதிகமாகிக் கொண்டே போகிறது. செல்வந்தர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் நிலைமை மட்டுமே நன்றாக உள்ளது. அவர்கள் மட்டும் நாளொன்றுக்கு பல மில்லியன் டாலர்களைச் செலவு செய்து கொண்டிருக் –கிறார்கள். அவர்கள் செல்வத்தையும் தகாத முறையில் சம்பாதிக்கின்றனர். அல்லாஹ் இந்த ஆட்சியாளர்களுக்கும், அரசர்களுக்கும், இந்த சுயநலவாதிகளுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் செல்வத்தைச் சேர்ப்பதற்கு பதில் செல்வத்தை சரியான முறையில் பயன்படுத்து –பவர்களாகவும் ஆவார்களாக. இதனால் இறைவனது திருப்தியும் கிடைக்கும். உலகியல் ரீதியாகவும் இவர்களுக்கு ஒரு சக்தி கிடைக்கும். முஸ்லிம் அல்லாத சக்திகள் இவர்களை தமக்கு பின்னால் செல்லவைப்பதற்கும், கண்ணை காட்டுவதற்கும் பதில் இவர்களின் பேச்சை ஒப்புக் கொள்பவர்களாகி விடுவர்.

தற்காலத்தில் ஒரு பிரச்சனை எழுந்துள்ளது. ஜெருசலத்தில் தமது தூதரகத்தை மாற்ற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் கூறியுள்ளார். மேலும், அதை தலைநகரமாக்குமாறு அறிவித்துள்ளார். இஸ்ரேலின் அனைத்து அலுவலகங்களும் அங்கு முதலிலேயே இருந்து வந்துள்ளது. ஆனால் அதனை வெளி உலகம் ஏற்றுக் கொள்ளவே இல்லை. இந்த அறிவிப்பு வந்த பிறகு மேலும் கூச்சல் எழுகிறது. அரசுகளும் எதிர்கின்றன. ஆனால், இவை அனைத்தும் முஸ்லிம் அரசுகளின் பலவீனத்தைக் காரணத்தில் கொண்டு இருக்கின்றனர். நாட்டுக்குள் நிம்மதியின்மை உள்ளது. இதுவே இதற்கு வழி வகுத்தது. இவ்வாறு அறிவிப்பு செய்வதற்கு மற்றவர்களுக்கு அவர்கள்தான் வாய்ப்பு தந்துள்ளனர்.

முஸ்லிம் நாடுகளுக்குள் ஒருபோதும் அமைதி ஏற்படக் கூடாது என்று அமெரிக்க அதிபர் நினைக்கிறார். அப்போதுதான் அவர் தாம் விரும்பிய படி செய்ய முடியும். அமெரிக்க அதிபர் இவ்வாறு அறிவிப்பது ஒருபோதும் ஒப்புக் கொள்ளத்தக்கதல்ல என்று சவூதி அரேபியா இப்போது அறிவிக்கிறது. ஆனால் சில நாட்களுக்கு முன்பு வரை அவர்கள் சொல்வதற்கு ஆமாம் போட்டு வந்தனர். ஈரானுக்கு எதிராக அமெரிக்க அறிவிப்பு செய்தபோது சவூதி ஆமாம் போட்டது. அப்போதே தடுத்திருக்க வேண்டும். நாங்கள் எல்லா முஸ்லிம் நாடுகளையும் ஆதரிக்கிறோம். எனவே முஸ்லிம்களின் எந்த நாட்டுக்கு எதிராகவும் எந்த நடவடிக்கையும் எடுப்பதை நாங்கள் சகிக்க மாட்டோம் என்று கூறி இருக்க வேண்டும். அதேபோன்று எமனுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பெரும் சக்திகளின் உதவியை எதிர்ப்பார்க்கிறது. அங்கு தமது சக்தியை வெளிப்படுத்துவதற்காகவும் அந்தப் பகுதியில் தமது அரசாட்சியை நிறுத்துவதற்காக அமெரிக்காவிடம் இருந்து பலன் பெறுவதற்காகவும் அமெரிக்காவுக்கு ஆமாம் போட்டது. உலகின் தற்காலிக பொருள்களுக்காக இறைவனது ஆட்சியை விட்டு அகன்று போனது. இறைவனுக்கு கட்டுப்படாமல் இருப்பதனால் இந்த விளைவுதான் ஏற்பட வேண்டியிருந்தது; ஏற்படுகிறது. பிறகு இவர்கள் தலையில் ஏறி அமர்ந்து விடுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உலகத்தை மட்டும் தேடுபவர்களுக்கும், உலக விருப்பங்களை நிறைவேற்றும் முயற்சியில் மட்டும் இருப்பவர்களை அரிப்பு நோயாளியுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார்கள். அம்மனிதன் சொறிந்து சொறிந்து தன் உடம்பை காயப்படுத்திக் கொள்கிறான். சொறிவதால் அவருக்கு தற்காலிக சுகம் கிடைக்கிறது. அவரின் தோள் உரிகின்றது. பிறகு அதிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்து விடுகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 155; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அதேபோன்று ஒரு மனிதன் ஒரு பொருளை அளவுக்கு அதிகமாக விரும்பும்போது இறுதியில் நிம்மதியின்மையை உருவாக்கிக் கொள்கிறான்.

அவர்கள் தமது சக்தி அதிகமாவதாக நினைக்கிறார்கள். தமது கூட்டம் அதிகரிப்பதாக நினைக்கிறார்கள். உள்ளபடி இவர்கள் தமது இரத்தத்தையே சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வின் கோபம் அதற்குமேல் கிடைக்க உள்ளது.

இந்தக் கருத்தை இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

اِعْلَمُوْٓا اَنَّمَا الْحَيٰوةُ الدُّنْيَا لَعِبٌ وَّلَهْوٌ وَّزِيْنَةٌ وَّتَفَاخُرٌۢ بَيْنَكُمْ وَتَكَاثُرٌ فِى الْاَمْوَالِ وَالْاَوْلَادِ ؕ
كَمَثَلِ غَيْثٍ اَعْجَبَ الْكُفَّارَ نَبَاتُهٗ ثُمَّ يَهِيْجُ فَتَرٰىهُ مُصْفَرًّا ثُمَّ يَكُوْنُ حُطَامًا ؕ
وَفِى الْاٰخِرَةِ عَذَابٌ شَدِيْدٌ ۙ وَّمَغْفِرَةٌ مِّنَ اللّٰهِ وَرِضْوَانٌ ؕ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ

இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், பொழுதுபோக்கும், அலங்காரமும், உங்களுக் –கிடையே பெருமை அடித்தக் கொள்வதும், செல்வங்களையும், குழந்தைகளையும் பெருக்கிக் கொள்வதில் போட்டியிடுவதுமேயாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (இவ் வாழ்க்கை) மழையைப் போன்றது. அதனால் உற்பத்தியான தாவர வகைகள் விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்கிறது. பின்னர் அது உலர்ந்து விடுகிறது. பின்னர் அது மஞ்சள் நிறமாவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது மக்கிப் போன சருகாக ஆகி விடுகின்றது. (உலகையே நோக்கமாகக் கொண்டவர்களுக்கு) மறுமையில் கடினமான தண்டனையும் (மற்றவர்களுக்கு) அல்லாஹ்விடம் இருந்து பாவ மன்னிப்பும் இறை திருப்தியும் உள்ளன. இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் பொருள்களடங்கிய தற்காலிக இன்பமேயன்றி வேறில்லை. **(57:21)**

ஆகவே, நம்பிக்கை கொண்ட ஒருவரின் பணி இந்த உலகியல் பொருள்களில் பெருமை கொண்டு அவற்றைப் பெறுவதற்காகவே தனது எல்லா முயற்சிகளையும் செலவழிப்பதற்குப் பதில் அல்லாஹ் உடைய மன்னிப்பையும் திருப்தியையும் அவர் தேட வேண்டும் என்பதாகும். சொறி நோயாளி போன்று தமது வாழ்வை வீணாக்கக் கூடாது.

இந்த உலகியல் வாழ்வுக்குரிய பொருள் பற்றி கருத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சபையில் இவ்வாறு கூறினார்கள்: ஒரு மனிதனுக்கு எந்த அளவு உலகியல் பொருள்களின் மீது ஆசை குறைவாக இருக்குமோ அந்த அளவுக்கு அது நிறைவேறும். உலகை விரும்புபவர்களின் நெஞ்சில் ஒரு நெருப்பு உள்ளது. மனிதன் ஒரு கஷ்டத்தில் உள்ளான். ஆசைகளை குறைப்பதன் மூலமாகவே அவனுக்கு நிம்மதி கிடைக்கிறது. உலகிற்காக அளவுக்கு அதிகமாக முயற்சி செய்வதிலிருந்து விடுதலை பெறுங்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதன் ஒரு குதிரையில் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு பக்கீர் அமர்ந்திருந்தார். அவர் போர்வையினால் மிகவும் சிரமப்பட்டு மூடிக் கொண்டிருந்தார். அது சிறிய துணியாக இருந்தது. அது அவரது மானத்தை மறைத்துக் கொண்டிருந்தது. இந்த குதிரையில் செல்பவர் அந்த பக்கீரிடம், எப்படி இருக்கிறீர்? என்று கேட்டார். அதற்கு அந்த பக்கீர், எந்த மனிதனது ஆசைகள் முற்றிலும் நிறைவேறி விட்டதோ அவரது நிலை எப்படி இருக்கும்? என்றார். கேட்டவருக்கு ஆச்சரியம்! உமது எல்லா ஆசைகளும் எவ்வாறு நிறைவேறின? என்று கேட்டார். அதற்கு அந்த பக்கீர், எவர் தமது எல்லா ஆசைகளையும் விட்டு விட்டாரோ அவருக்கு எல்லாமே கிடைத்தது போன்றதுதான் என்று கூறினார்.

அன்னார் கூறுகிறார்கள்: இதில் கூறப்பட்டது என்னவெனில், எல்லாவற்றையும் பெற வேண்டும் என்று நினைத்தால் கஷ்டம்தான். ஆனால் அவர் தன்னிறைவு பெற்றவாறு ஆசைகளை விட்டு விட்டால் எல்லாமே கிடைத்தது போன்றதாகும். ஈடேற்றம் என்பது இதுதான். ஒரு ரசனை இருப்பது, எந்த கஷ்டமும் இல்லாமல் இருப்பது, துக்கமான வாழ்வு இவ்வுலகிலும் கஷ்டமாக இருக்கிறது. மறுவுலகிலும் அது நன்றாக இருக்காது.

அவர் கூறுகிறார்கள்: எவ்வாறிருப்பினும் இவ்வுலகம் முடிந்து விடும். ஏனெனில், இது பனிக்கட்டி போன்றது. இதனை எந்த துணி அல்லது பெட்டியில் வைத்தாலும் அது கரைந்து போய் விடும். பனிக்கட்டியை வாழ்க்கையோடு ஒப்பிட்டு அன்னார் இந்த உதாரணத்தைக் கூறினார்கள். அதுபோன்து இந்த உலகியல் வாழ்வை நிலைநாட்ட எவ்வளவு முயற்சி செய்தாலும் அது முடிந்து போய் விடும் என்பதே உண்மையாகும். நாளுக்கு நாள் ஏதாவது மாற்றம் ஏற்படவே செய்யும். உலகில் டாக்டர் இருக்கிறார். எவரும் வாழ்நாளை நிரந்தரமாக நிலைநாட்ட மருந்து எழுதவில்லை. மனிதன் நிரந்தரமாக உலகில் வாழ்வதற்காக மருந்தை எந்த மருத்துவரும் எழுதவில்லை அல்லது இவ்வளவு காலம் வாழ்வு இருக்கிறது என்று கூறியதில்லை. ஒருவர் வயது முதிர்ந்து விட்டால் அவரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக சிலர் இதெல்லாம் ஒரு வயதா? 60 அல்லது 70 வயதெல்லாம் ஒரு வயதா? என்று கூறுகின்றனர். இவை அனைத்தும் தற்காலிகம் ஆகும். மனிதன் வாழ்நாள் குறித்து ஆசைப்பட்டு நஃப்ஸின் ஏமாற்றுதலின் வீழ்ந்து விடுகிறான். 60 வயதிற்குப் பிறகு உலகியல் சக்தி முற்றிலும் இல்லாமல் போய் விடுகிறது. 80, 82 வயது வரை இருந்து உடல் நலம் ஓரளவு நன்றாக இருந்தால் அவர் நற்பேறு பெற்றவராவார். பெரும்பாலார் வலிமை இழந்தவர்களாகவே ஆகி விடுகின்றனர். மக்கள் அவரை தமது ஆலோசனைக்காக எடுப்பதும் இல்லை. அறிவும் மூளையும் ஒளியும் எஞ்சி இருப்பதும் இல்லை. சில வேளை அந்த வயதிலுள்ள வயோதிகர்களுக்கு பெண்களும் அநீதியிழைக்கின்றனர். அவர்களுக்கு உணவு தர மறந்து விடுகின்றனர். சில வேளை வீட்டிலுள்ளவர்களும் அத்தகையோருடன் சரியாக நடந்து கொள்வதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: பிரச்சனை என்னவெனில், வாலிப வயதில் ஒரு வகை மயக்கத்தில் இருக்கிறான். மரணம் அவனுக்கு நினைவில் இருப்பதில்லை. எப்போதும் இந்த நிலை இருக்கும் என்று எண்ணுகின்றான். தீய செயல்களைச் செய்கின்றான். இறுதியில் புரியும்போது ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இந்த இளம் வயதை ஓர் அருளாகக் கருத வேண்டும்.

அன்னார் அங்கிருந்த ஒரு இந்து நண்பர் ஷரம்பத்தைப் பார்த்து கூறினார்கள்: உங்கள் வயதைப் பற்றி நீங்கள் என்ன நினைத்தீர்களோ அவற்றில் சில நிறைவேறி இருக்கலாம். ஆனால் நன்றாக சிந்தித்துப் பார்த்தால் அவை நீர்க்குமிழ் போன்று உடனே மறைந்து போய் விடும். கையில் கிடைக்காது. கடந்து போன சொகுசுகளால் எந்தப் பயனும் இல்லை. கற்பனை செய்தால் துக்கமே ஏற்படும். மனிதன் கடந்த கால மகிழ்ச்சிகளை நினைத்தால் கஷ்டமே ஏற்படும். எந்தப் பயனும் இருக்காது. அறிவுள்ள மனிதனுக்கு இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், நேரத்திற்கேற்ப புரிந்து செயல்பட வேண்டும். எந்த நேரம் முடிந்து விட்டதோ அது முடிந்து விட்டது. அதனை நினைத்துப் பார்ப்பது பயனற்றது. பாருங்கள்! தாயின் மடியில் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான். எல்லாரும் எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். அது ஒரு சுவர்க்கமாக இருக்கிறது. இப்போது அந்த நேரத்தைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். அது எங்கே போனது? தற்காலிக உலகம்! எல்லாமே போய் விட்டது. ஆட்சி அதிகாரம் எது கிடைத்தாலும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அந்தக் காலம் பிறகு எங்கே கிடைக்கப் போகிறது?

அன்னார் ஒரு சம்பவத்தை கூறுகின்றார்கள்: ஓர் அரசர் சென்று கொண்டிருந்தார். சில சிறுவர்களைப் பார்த்து அழ ஆரம்பித்து விட்டார். அவர்களைக் கடந்து செல்லும்போது அவருக்கு அழுகை வந்து விட்டது. சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். எந்த கவலையும் அவர்களுக்கு இல்லை. அதனைப் பார்க்கும் போது அரசருக்கு அவரது சிறிய வயது நினைவுக்கு வந்து விட்டது. அது எத்தகைய காலம்? இது எத்தகைய காலமாக இருக்கிறது? ஆக, அரசருக்கு எல்லாம் இருந்தும் கூட நிம்மதி இருப்பதில்லை. ஆகவே அந்த உணர்வு இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: வயது முதிர்ந்த காலம் மிகவும் மோசமானது. உறவினர்கள் கூட இவர் இறக்கவில்லையே என்று நினைப்பார். மரணிக்கும் முன்பே சந்ததிகள் போய் விடுகின்றது. சில உறவினர்களுக்கு கல் நெஞ்சம் உடையவர்கள் வயோதிகர்களான நோயாளி –களைப் பார்த்து இவர்கள் நமக்கு தொந்தரவாக இருக்கின்றனரே என்று அவர்களது வாழ்வைப் பற்றி கூறுகின்றனர். பல் விழுந்து விடுகின்றது. கண் போய் விடுகிறது. புரை விழுந்து விடுகிறது. பார்வை தடுமாறுகிறது. இன்னும் சிலருக்கு கடைசி காலத்தில் நோயின் காரணமாக முகமும் மாறி விடுகின்றது. தற்கொலை செய்து கொள்கின்றனர். நாம் உலகில் அதனைப் பார்க்கிறோம். மனிதனுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இருந்தும் சக்தி கிடைக்கும் போது வாலிபம் இருக்கும் போது செல்வம் சேர்க்கும் காலத்தில் தம்முடன் பிற்காலத்தில் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சிலர் துக்கங்களிலிருந்து தப்பிக்க நினைக்கிறார்கள். அதிலேயே போய் விழுந்து விடுகின்றனர். பிள்ளைகள் சரியில்லை எனில் இன்னும் கஷ்டப்படுகிறார்கள். அந்த நேரத்தில் அல்லாஹ்வின் கட்டளையின்படி நடந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று எண்ணுகின்றனர். உலகில் விழுந்து அல்லாஹ்வை மறந்து விடுகின்றனர். நிறைய ஃபிர்அவ்ன்கள் சென்று விட்டனர். ஹாமான்கள் சென்று விட்டனர். அவர்களின் வாழ்வை மனிதன் சிந்தித்துப் பார்த்தால் பெரும் சக்தி படைத்தவர்களாக இருந்தும் அவர்களின் உலகியல் மகத்துவம் அவர்களுக்கு எந்தப் பயனும் தரவில்லை. இக்கால அரசுகளுடன் ஒப்பிடும்போது அவர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தனர். ஆனால் அழிந்து போய் விட்டனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் பக்கம் கவனம் செலுத்துபவர்தான் அறிவுள்ளவர். இறைவன் ஒருவன்தான் என்று உணருங்கள். அவனைப் போன்று எதுவும் இல்லை. நாம் சோதித்துப் பார்த்துள்ளோம். அவனைத் தவிர எந்த தேவி, தேவதைகளும் பயன்படமாட்டார்கள். இறைவன் பக்கம் ஒருவர் குனியாதை வரை அவர் மீது எவரும் கருணை காட்ட மாட்டார். ஏதாவது ஆபத்து வந்தால் எவரும் கேட்கவும் மாட்டார். மனிதன் மீது ஆயிரக்கணக்கான தொல்லைகள் வருகின்றன. நினைவில் கொள்ளுங்கள். பரிபாலிப்பவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. அவனே தாயின் உள்ளத்தில் அன்பை இட்டான். அவளது உள்ளத்தை இறைவன் அவ்வாறு ஆக்காவிட்டால் அவளும் கவனிக்க மாட்டார். எனவே அவனுக்கு யாரையும் இணையாக்காதீர்கள். இவ்வாறு ஓர் இந்துவுக்கு அவர்கள் போதனை செய்தார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 422-425; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

சில மார்க்கங்களில் கடவுளில் ஆண் பெண் வகைகளை உருவாகியுள்ளனர். சிலர் பொருள்கள் சந்ததிகள், சக்தி, ஆட்சி இவற்றை இறைவனுக்கு எதிராக கடவுளாக்கி விடுகின்றான். இன்னும் சிலர் பெரிய நாடுகளின் நட்பிலிருந்து பயனடைய விரும்புகின்றனர். இவை அனைத்தும் முடிந்து போகக் கூடியவையாகும். பிறகு அல்லாஹ், நரகமே அத்தகையோரின் தங்குமிடமாகும் என்று கூறுகின்றான்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எவர் அல்லாஹ்வுக்காக ஆகி விடுகின்றாரோ அவருக்காக அல்லாஹ் ஆகி விடுகின்றான். அல்லாஹ் எவரிடமும் ஏமாற மாட்டான். எவராவது அல்லாஹ்வை ஏமாற்றலாம் என்று நினைத்தால் அது அவரது அறியாமை ஆகும். அவர்தான் உலகில் ஏமாந்து கொண்டிருக்கிறார். உலகின் அழகு உலகின் நேசம் எல்லா தவறுகளுக்கும் வேர் ஆகும். அதில் குருடாகி மனிதன் மனிதத் தன்மையிலிருந்து வெறியேவி விடுகிறான். நான் என்ன செய்கிறேன்; என்ன செய்ய வேண்டும் என்பதை அவன் உணர்வதில்லை. அறிவுள்ள மனிதன் எவரிடமும் ஏமாற மாட்டார் எனில் அல்லாஹ் எவ்வாறு ஏமாறுவான்? அத்தகைய தீமைகளின் வேர் உலக ஆசையாகும். இந்த உலக ஆசை தான் இன்று முஸ்லிம்களை அழித்துக் கொண்டிருக்கிறது. விழிக்கும்போதும், உறங்கும்போது, உட்காரும்போதும், எழும்போதும், நடக்கும்போதும் இந்த கவலையில் மூழ்கி இருக்கிறார்கள். உலகியல் கவலை மட்டுமே உள்ளது. கப்ரில் வைக்கப்படுவது குறித்த எண்ணமே இல்லை. அத்தகையோர் அல்லாஹ்வுக்கு பயந்தால் மார்க்கத்திற்காக சிறிதேனும் கவலைப்பட்டால் மிகவும் பயனடைந்திருப்பார்கள். (அஹ்மதி அவர் கைர் அஹ்மதி மேஃபர்க். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 483. Computerised Edition 2009 –ல் இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, ஒரு நம்பிக்கை கொண்டவரின் பணி உலகியல் கவலையில் விழுவதற்குப் பதிலாக தமது மறுமையை சரி செய்வதற்கும், இறைவனது அன்பைப் பெறுவதற்கும் கவலைப்பட வேண்டும். உலகியல் பொருள்களை இறைவனது அருளாகக் கருதி பயன்படுத்துங்கள். ஆனால் அதனை வணக்கத்திற்குரியதாக ஆக்காதீர்கள். அதன் பின்னால் ஓடாதீர்கள். நமது வணக்கத்திற்–குரியவன் உண்மையான வணக்கத்திற்குரியவன் மட்டும்தான். இறைவன் இடம் மட்டுமே ஒரு முஃமின் எல்லாவற்றினும் அதிகம் அன்பு கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அன்புதான் மனிதனிடம் தக்வாவை உருவாக்குகிறது. போதும் என்ற எண்ணத்தையும் உருவாக்குகிறது. அல்லாஹ் ஒரு முஃமினின் அடையாளமாகக் கூறினான்: அவன் அல்லாஹ்வின் மீது எல்லாவற்றையும் விட அதிகமாக அன்பு கொள்வான்.

அல்லாஹ் கூறுகிறான்: وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ முஃமின்களாக இருப்பவர்கள் அல்லாஹ்வையே அதிகமாக நேசிப்பார்கள். (2:166)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வது சம்பந்தமாக கூறுகிறார்கள்: அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் தன்மானம் அவனை நேசிப்பதில் வேறு ஒன்றை இணையாக்குவதை விரும்புவ–தில்லை. அல்லாஹ்வுக்கு இவ்விஷயத்தில் பெரும் தன்மானம் உள்ளது. அவனது நேசத்தில் யாரையும் இணையாக்கக் கூடாது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஈமான் எல்லா–வற்றிலும் நேசத்திற்குரியது. நாம் அன்பு கொள்வதில் அவனுக்கு யாரையும் இணை ஆக்காமல் இருப்பதன் மூலம் அது பாதுகாப்பாக இருக்க முடியும். அல்லாஹ் நம்பிக்கை கொண்டவரின் அடையாளமாக கூறுகின்றான்: وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ – எவர் நம்பிக்கை கொண்டவராக இருப்பாரோ அவர் இறைவனை தவிர அதிகமாக எவரிடமும் உள்ளத்தை லயிக்க


**திருக்குர்ஆனிலிருந்து...**

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்–கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

விட மாட்டார். தனித்துவமிக்க அன்பு அல்லாஹ்வுக்கே உரியது. அதனை இன்னொருவருக்கு தந்தவர் அழிந்து போய் விடுவார். எல்லா பரக்கத்துகளும் அந்த இறைவனுக்கே உரியது. எல்லா ஏற்புடைமைகளும் அவனுக்கே உள்ளன. இவை அனைத்தும் சாதாரண தொழுகை சாதாரன நோன்பால் கிடைத்து விடுமா? ஒருபோதும் கிடைக்காது. இவை அன்பினால் நிறைந்த தவ்ஹீதால் கிடைக்கிறது. அல்லாஹ்வின் அன்பில் மாய்ந்து போவதால் கிடைக்கிறது. எவர் இறைவனுக்காக ஆகி விடுவாரோ அவருக்காக அவன் ஆகி விடுகிறான். அவர் தனது கைகளால் மற்றவரை அவன் வழியில் பலி இடுகிறார். நான் இறை வல்லமையின் உண்மை நிலையை அறிகிறேன். தனது உயிரை விட அதிக பிரியமான ஒருவரை விட்டுப் பிரியும் நிலையை வேதனையை நான் நன்றாக உணர்வேன்.

ஆனால், தன்மானம் என்னவெனில், நமது உண்மையான அன்பிற்குரியவனுக்கு இணையாக வேறு எவரும் இருக்கக் கூடாது. எமது உள்ளம் எப்போதும் தீர்ப்பு வழங்குகிறது. மற்றவரிடம் நிரந்தர அன்பு வைப்பதும், அதனால் இறைவனது அன்பு உள்ளத்தை விட்டு வெளியேறும் அளவுக்கு அவர் மகனுடனோ நண்பருடனோ வேறு எவருடனோ அன்பு கொள்வது ஒருவகை இறை மறுப்பும் பெரும் பாவமும் ஆகும். இறைவன் அருள் புரிந்து கருணை காட்டா விட்டால் அவரது ஈமான் பறிபோவதற்கும் சாத்தியம் உண்டு. (அல்ஹகம் 10 ஆகஸ்டு 1907 பக்கம் 9 எண்29 தொகுதி 5 த.்ப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) சூரா அல் பக்கரா வசனம் 106)

எனவே, உலகியல் பொருள்களில் அதிக நேசத்திற்குரியதாக, இறைவனுக்கு எதிரில் நிற்பதைப் பற்றி ஓர் உண்மையான முஃமின் சிந்திக்கவே முடியாது. இதற்காக தக்வாவில் முன்னேற வேண்டும். போதும் என்ற எண்ணம் உருவாக வேண்டும். இது ஒரு முஃமினுக்கு மிகவும் முக்கியமாகும். எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முத்தகி ஆக இருங்கள். அதனால் நீங்கள் பெரிய வணக்கசாலிகளாக ஆவீர்கள். இறைவன் மீதுள்ள அன்பும் தக்வாவும் உள்ளத்தில் உருவாகி விட்டால் அல்லாஹ்வின் அடியாராக இருப்பதன் உரிமையை மனிதன் செலுத்த முடியும். உண்மையான வணக்கம் உடையவரின் வேலை என்னவென்றால் அவர் தம்மிடம் போதும் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: போதும் என்ற மனதை ஏற்படுத்தினால் நன்றி செலுத்துபவராகவும் ஆவீர்கள். (சுனன் இப்னு மாஜா. கிதாபுஸ் ஸுஹது பாபுல் வரஹ் வ தக்வா ஹதீஸ் 4217)

இதற்கு ஒரு நம்பிக்கை கொண்டவர் இறைவனுக்கு நன்றி செலுத்துபவராக ஆக வேண்டும். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன் என்று வாயினால் மனிதன் கூறி விடலாம். ஆனால் உலகியல் பொருள்கள், பொலிவுகளுக்கு பின்னால் ஓடுபவர் உண்மையில் உலகப் பேராசை உடையவராவார். அவர் ஒருபோதும் உண்மையான நன்றி செலுத்துபவராக முடியாது.

அத்தகைய உலகியல்வாதிகள் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆதமின் மகனிடம் தங்கத்தின் ஒரு மலை இருந்தால் இன்னொரு மலை இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார். அவரது வாயை பிணத்தைத் தவிர வேறு எதுவும் நிரப்ப முடியாது. கப்ரில் செல்லும்போதுதான் அவரது பேராசை முடிவுக்கு வரும்.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் தவ்பா செய்பவரின் தவ்பாவை ஏற்றுக் கொள்கிறான். (சஹீஹ் புகாரி. கிதாபுர் ரிக்காக்கு பாபு மா யத்கீ மின் ்.பித்னதில் மாலி ஹதீஸ் 6438)

ஆகவே, மனிதன் வாழ்நாளில் செய்த தவறுக்கு தவ்பா செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரு நம்பிக்கை கொண்டவரிடம் இருக்க வேண்டிய போதும் என்ற மனம் பற்றி கூறுகின்றார்கள்: ஒரு மனிதனுக்கு மன நிம்மதி மற்றும் உடல் நலத்துடனும் ஒரு நாளுக்கான உணவுடனும் ஒரு நாள் உதித்தால் அவன் முழு உலகையும் வென்றவன் ஆவான். எல்லா அருள்களும் அவருக்கு கிடைத்துள்ளன. (சுனன் திர்மிதி. அப்வாபுஸ் ஸுஹது பாபு ்.பில் வஸ்்.பி மின் ஹைஸத் லகுத்துன்யா ஹதீஸ் 2346)

இதுவே போதுமென்ற மனத்தின் அளவுகோல் ஆகும். அல்லாஹ் நம்மிடம் இந்த போதும் என்ற மனத்தை உருவாக்குவானாக. தக்வாவை உருவாக்குவானாக. உலகியல் பொருள்களின் நேசத்திற்குப் பதிலாக இறைவனின் மீது நேசத்தைப் பெறுவது நமது நோக்கமாக இருக்கட்டுமாக. இறைவனது மன்னிப்பையும் திருப்தியையும் பெற முயல்வோமாக.

நான் ஒரு துஆவுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். நான் சுருக்கமாக குறிப்பிட்டது போன்று முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் உலகியல் ஆசைகளின் பின்னால் செல்கின்றனர். அவர்கள் செயல் ரீதியாக பெரும் சக்திகளை தமது கடவுளாக்கி இருக்கிறார்கள். அவர்களின் நட்புதான் நமக்கு நிலைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு உத்திரவாதம் தரும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். அதைப் பற்றி ஜெர்மனிய பத்திரிகையில் ஒரு கட்டுரையாளர் ஒரு கருத்தை எழுதியுள்ளார். உலகம் வாஷிங்டனை தமது மாடல் ஆக நினைத்து வந்தது. அல்லது அதன் பக்கம் திரும்பி இருக்கிறது. நாம் பின்பற்றத்தக்க மாடல் அவர்கள்தான் என்று நினைக்கிறது. ஆனால் அதற்கான எந்த தகுதியும் இப்போது அதற்கில்லை. ஏனெனில் இப்போது அந்த இடத்தில் சீனாவின் தலைநகர் பீஜிங் ஒரு மாடல் ஆகிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா தனது தகுதியை இழந்து விட்டது. ஆகவே உலகியல் சாமானங்கள் அனைத்தும் தற்காலிக – மானவையாகும். இன்று வந்தது நாளை இருக்காது. முஸ்லிம்கள் இதனை புரிய வேண்டும். ஜெருசலத்தில் தமது தூதரகத்தை மாற்ற வேண்டும் என்ற அறிவிப்பும் கூட இஸ்ராயீலுடன் தொடர்பு மேம்படும் என்ற எண்ணத்தில்தான் செய்யப்பட்டிகின்றது. ஆனால் அல்லாஹ்வின் புறமிருந்து அழிவு வந்தால் உலகியல் நட்புகள் ஒன்றும் உதவாது. பெரிய சக்திகளின் மீது அமெரிக்காவின் மீது இது ஆரம்பமாகி விட்டதாக தோன்றுகிறது. என்ன விளைவு ஏற்படும் என்பதை இறைவனே அறிவான். ஆனால் முஸ்லிம்கள் தமக்குள் சண்டையிடுவது இந்த சூழ்நிலையை இன்னும் அதிகமாக்கும். எனவே நாம் முஸ்லிம் நாடுகளுக்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் ஒன்றுபட வேண்டும். சண்டைகளுக்கான சாத்தியக்கூறுகள் அகல வேண்டும். முஸ்லிம் நாடுகளுக்குள் நிலவும் சண்டையினால் ஆயிரமல்ல; இலட்சக்கணக்கில் உயிர்கள் அழிந்து விட்டன. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக. இவர்கள் அமைதியாக வாழ்வார்களாக. தமக்குள் உள்ள சண்டைகளை முடிவுக்கு கொண்டு வருவார்களாக. இஸ்லாத்தின் எதிரிகள் அதிலிருந்து பயனடைந்து விடக் கூடாது. எல்லாவற்றிற்கும் மேல் நாம் துஆ செய்ய வேண்டும். முஸ்லிம்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடன் இணைந்துதான் அவர்கள் தமக்கிடையிலும் உலகிலும் அமைதியை நிலைநாட்டுபவர்களாக ஆக முடியும்.

★ ★ ★ ★ ★

St. Thomas Mount ஜமாஅத்தைச் சார்ந்த ஜனாப் S.M. முஸ்்.ப்பர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் ஜனாப் சலீம் அஹ்மது M.A.,M.L. (வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்) அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளால் 19.10.2017 வியாழக்கிழமை அன்று பெண் குழந்தை பிறந்துள்ளது - அல்ஹம்துலில்லாஹ். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அந்தப் பெண் குழந்தைக்கு ***ரிதா சலீம்*** எனப் பெயர் வைத்துள்ளார்கள். தாய் மற்றும் குழந்தையின் உடல்நலத்திற்காக அனைவரும் துஆ செய்யவும்.

*குமரி மாவட்டத்தில்*
*இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்*
*பத்ர் வார இதழ் சம்பந்தமாக*
***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***
*1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)*
*இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.*
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.**
(16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : +91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 18-25 January 2018 Issue No. 3-4

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

எதிரிகள் உருவாகி விடுவர். அவர்கள் பெரும் பெரும் தீங்கை விளைவிப்பர் என்ற விஷயம் ஒரு முன்னறிவிப்பாகும். ஏனென்றால், இந்த செய்தி பராஹீனே அஹ்மதிய்யாவில் (ஏற்கெனவே) எழுதப்பட்டிருக்கின்றது. அது எழுதப்பட்ட பிறகு 25 வருடங்கள் கழிந்து விட்டன. அந்த சமயத்தில் சமுதாயத்தில் எனக்கு எதிரியாக எவரும் இருக்கவில்லை. ஏனென்றால், இப்போது பாராஹீனே அஹ்மதிய்யா கூட வெளியிடப்படவில்லை. பிறகு, எதிர்ப்பிற்கான என்ன காரணம் இருந்தது? எனவே, சந்தேகமின்றி முதலில் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் காரணமாக சகோதரர்களாக இருந்தவர்கள் ஒரு காலத்தில் உயிரின் எதிரிகளாக உருவாகி விடுவர் என்ற இந்த செய்தி ஒரு மறைவான விஷயமாகும். அது நிகழ்வதற்கு முன்னதாக இறைவன் அதை வெளிப்படுத்திக் கூறி விட்டான். மேலும், அது பாரஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டிருக்கின்றது.

(2) இந்த முன்னறிவிப்பிலுள்ள இரண்டாவது மறைவான செய்தி இதுவாகும்: அதாவது, இறுதியில் அந்த எதிரிகள் தோல்வி அடைந்து இழப்பிற்குரியவர்களாக இருப்பர். அவர்களில் பலரும் யூஸுஃபின் சகோதரர்களைப் போன்று (உண்மையின் பக்கம்) திரும்பி விடுவர். அப்போது இறைவன் யூஸுஃபிற்கு அணிவித்தது போன்றே இந்த எளியவனுக்கும் கண்ணியத்தின் கிரீடத்தை அணிவிப்பான். எவரும் எதிர்பார்த்திராத அந்த மகத்துவத்தையும் மேன்மையையும் எனக்கு வழங்குவான். எனவே, இந்த முன்னறிவிப்பின் பெரும் பகுதி நிறைவேறி விட்டது. ஏனென்றால், எனது வீழ்ச்சியை விரும்புகின்ற அத்தகைய எதிரிகள் உருவாகி விட்டனர். மேலும் உண்மையில் இம்மக்கள் தமது தீய எண்ணங்களில் யூஸுஃபின் சகோதரர்களை விட தீயவர்களாவர். எனவே, இறைவன் பல இலட்சக்கணக்கான மக்களை என்னை பின்பற்ற வைத்து, எனக்கு ஒரு சிறப்பான கண்ணியத்தையும் மகத்துவத்தையும் வழங்கி, அவர்களை இழிவுபடுத்தி விட்டான். அந்த நேரமும் வந்து விட்டது. அப்போது இதை விட அதிகமாக இறைவன் எனது மகிமையை வெளிப்படுத்துவான். பெரும் பெரும் எதிரிகளிலிருந்து எவர்கள் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களுக்கு رَبَّنَا اغْفِرْ لَنَا إِنَّا كُنَّا خَاطِئِينَ அதாவது, எங்கள் இறைவா! எங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக நாங்கள் தவறிழைத்தவர்களாவோம் என்று கூற வேண்டியது வரும். மேலும், تَاللّٰهِ لَقَدْ اٰثَرَكَ اللّٰهُ عَلَيْنَا அதாவது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக அல்லாஹ் எங்கள் மீது தங்களுக்கு மேன்மையினை வழங்கியுள்ளான் என்றும் அவர்களுக்கு கூற வேண்டியது வரும்.

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து...

கிலாஃபத்தின் பொருளே என்னவென்றால், கலீஃபாவின் நாவிலிருந்து ஏதாவது சொற்கள் எப்போது வெளி வந்தாலும் அப்போதே அனைத்து திட்டங்களையும் தூக்கி எறிந்து விட்டு தற்போது கலீஃபாவின் கட்டளையே சிறந்த திட்டமாகவும், பயன்தரக்கூடிய திட்டமாகவும் இருக்கும் என்று கருத வேண்டும். எப்போது வரை இந்த ஆன்மா ஜமாஅத்தில் உருவாகவில்லையோ அப்போது வரை அனைத்து குத்பாக்களும் வீணானவையாகவும் அனைத்து திட்டங்களும் தோல்வியுற்றதாகவும் ஆகி விடும்.

(ஜுமுஆ குத்பா 24.01.1936)

**110 -வது அடையாளம்** பராஹீனே அஹ்மதிய்யாவில் இடம் பெற்றுள்ள إِنَّا أَعْطَيْنَاكَ الْكَوْثَرَ - ثُلَّةٌ مِّنَ الْأَوَّلِينَ وَثُلَّةٌ مِّنَ الْآخِرِينَ என்ற முன்னறிவிப்பு ஆகும் (பராஹீனே அஹ்மதிய்யாவின் பக்கம் 556 -ஐப் பார்க்கவும்)

பொருள்: நாம் உமக்கு அதிக எண்ணிக்கையிலுள்ள ஒரு ஜமாஅத்தை வழங்குவோம். முதலில், முதலாவது பிரிவினர் பேரழிவுகள் இறங்குவதற்கு முன்னதாக நம்பிக்கை கொள்வர். இரண்டாவது பிரிவினர் இறை கோபத்தின் அடையாளங்களைப் பார்த்த பிறகு நம்பிக்கை கொள்வர். நாம் பலமுறை எழுதி விட்டோம். பராஹீனே அஹ்மதிய்யாவில் எந்த அளவு முன்னறிவிப்புகள் இடம் பெற்றிருக்கின்றதோ அதிலிருந்து இப்போது 25 வருடங்கள் கழிந்து விட்டன. அது, ஒரு மனிதன் கூட என்னுடன் இல்லாமல் இருந்த அந்தக் காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும். நான் கூறுகின்ற இந்த விஷயம் தவறாக இருந்தால் ஒரு வகையில் எனது முழு வாதமுமே பொய்யாகி விடும். எனவே, இந்த முன்னறிவிப்பும் கூட பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டிருக்கின்றது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். தனிமையில், ஆதரவற்ற நிலையில் நான் இருந்து வந்த அந்தக் காலத்தில் இந்த முன்னறிவிப்பானது ஆயிரக்கணக்கான மனிதர்கள் என்னிடம் பைஅத் செய்கின்ற அந்தக் காலத்தை பற்றி தெரிவிக்கின்றது. எனவே, இக்காலத்தில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. மறைவான செய்திகளை தெரிவிப்பதற்கான ஆற்றல் அல்லாஹ்வை தவிர வேறு எவருக்கும் இல்லை. மறைவான செய்திகளைப் பற்றிய அறிவு இருப்பது இறைவனுக்கு மட்டும் உள்ள தனிச்சிறப்பாகும். ஆனால், இப்போது நமது எதிரிகளின் பார்வையில் மறைவான செய்திகளைப் பற்றிய அறிவு இருப்பது கூட இறைவனுக்குரிய சிறப்பம்சம் அல்ல. இவர்கள் இதில் எதுவரை முன்னேறிச் செல்கின்றனர் என்பதைப் பாருங்கள்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 269)

## ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு ஹுஸூர் அவர்களின் மிக முக்கியமான அறிவுரை

ஜமாஅத் சகோதரர்களின் தவறான நடைமுறையை மக்கள் பொறுத்துக் கொள்வார்கள். அதனை அவர்கள் மிகப்பெரிய விஷயமாகக் கருதுவதில்லை. ஆனால், ஜமாஅத் பொறுப்பாளர்கள் வரம்பு மீறி செயல்பட்டால் மக்கள் அதை மிகவும் தீயதாகக் கருதுகிறார்கள். எந்த அளவுக்கு குற்றச்சாட்டுகளை பொறுப்பாளர்கள் மீது அவர்கள் சுமத்துகின்றார்கள் என்றால், இறுதியில் அதன் காரணமாக அவர்கள் ஜமாஅத்தை விட்டே தொடர்பற்றவர்களாக ஆகி விடுகின்றனர். எனவே, ஜமாஅத் பொறுப்பாளர்கள் தங்களது நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் நல்லவர்களாகவும் இறையச்சமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு காலையும் உங்களுக்காக நீங்கள் இறையச்சத்துடனேயே இரவைக் கழித்தீர்கள் என்றும், ஒவ்வொரு இரவும் நீங்கள் இறைவனுக்கு அஞ்சியவாறே பகலைக் கழித்தீர்கள் என்றும் சாட்சி கூற வேண்டும்.

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் 8 ஜனவரி 2008 அன்று நடைபெற்ற நேர்காணல் நிகழ்ச்சியிலிருந்து...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad